விலை ரூபா 40
பக்கங்கள் - 12
# ஒருவன்
ORUVAN - ඔරුවන්
ஆண்டு: 01 இதழ் : 55 குரோதி வருடம் மார்கழி மாதம்
10 ஆம் திகதி புதன்கிழமை ஹிஜ்ரி 1446 ஜமாதுல் ஆகிரா 23 (25.12.2024)




# அரிசி விநியோகத்தில் சிக்கல்: தவறை ஏற்றது அரசாங்கம்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசியை விநியோகிக்கும் முறையில் சிக்கல்கள் இருப்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. அதனை நிவர்த்தி செய்ய விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது, அரசாங்கம் அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கைகளை எடுத்துள்ள போதிலும் இன்னமும் சந்தையில் அரிசிக்கு பாரிய பற்றாக்குறை நிலவுவதாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், 70ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம்

02



இறக்குமதி காலம் நீடிப்பு




## சமூகங்களுக்குள் உறவுகளை வலுப்படுத்துவோம்



யூபிலி ஆண்டிற்குள் நுழையும் நாங்கள் நமது குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குள் அன்புப் பிணைப்பை ஏற்படுத்தி உறவுகளை வலுப்படுத்துவோம். ஒருவரோடு ஒருவர் கொண்டிருக்கின்ற கசப்பான காழ்ப்புணர்வுகளைதுண்டித்து மன்னிப்பின் மக்களாவோம்

02

## சமூகக் கட்டமைப்பை நல்வழிப்படுத்த உறுதி பூணுவோம்.!



“சகோதரத்துவத்தையும் சகவாழ்வையும் மதிப்பதன் மூலம், அந்த சமூக கட்டமைப்பை நல்வழிப்படுத்தி மகிழ்ச்சிகரமான சமூகமொன்றுக்காக பிரஜைகள் என்ற வகையில் நாம் அனைவரும் கைகோர்க்க உறுதி பூணுவோம்” என ஜனாதிபதி விடுத்துள்ள நத்தார் செய்தியில் தெரிவித்துள்ளார்.

02

## அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்களின் பயனை 2026இல் மக்கள் அனுபவிப்பர்

(சுப்ரமணியம் நிஷாந்தன்)



தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி வருவதுடன், தற்போதைய தீர்மானங்களின் பிரதிபலனை எதிர்வரும் 2026ஆம் ஆண்டு மக்கள் அனுபவிப்பர் என பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில்ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார். கொழும்பில் நேற்று செவ்வாய்க் கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், நாட்டின் பொருளாதாரம்

02

## பூரணையில் பாடசாலைகளில் வைபவங்களை நடத்த தடை!

**கல்வியமைச்சு புதிய சுற்றுநிருபம்**

( முகம்மட் முக்தார் )

வார இறுதிநாளான ஞாயிற்றுக்கிழமையிலும், பூரணைதினங்களிலும் அரச பாடசாலைகளில் வைபவங்கள், மேலதிக வகுப்புக்கள் நடத்தப்படுவதை கல்வியமைச்சு தடைசெய்துள்ளதாக கல்வியமைச்சின் பாடசாலைகள் செயற்பாட்டுக்கிளையின் மேலதிக செயலாளர் எம்.ஆர்.காரியவாசம் அறிவித்துள்ளார்.

02

## அமைச்சர் ஹந்துன்நெத்தி பெயரில் பண மோசடி

**சி.ஐ.டியில் முறைப்பாடு**

(கனுஷியா புஷ்பகுமார்)

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தனது பெயரில் மேற்கொள்ளப்படும் பண மோசடி தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று(24) பிற்பகல் கொழும்பு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் தலைமையகத்தில் அவர் இம்முறைப்பாட்டை செய்துள்ளார்.

அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி என அடையாளப்படுத்தப்படும் நபர் அல்லது குழு, வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை இலக்கு வைத்து சமூக பராமரிப்பு

02

## சுனாமி அனர்த்தம்: 20 ஆண்டு பூர்த்தி!

( முகம்மட் முக்தார் )

இலங்கையில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு நாளையுடன் (26) இருபது ஆண்டுகள் பூர்த்தியடைகிறது.

2006ம் ஆண்டு டிசம்பர்மாதம் 26ம் திகதி கடல்கோள் என அழைக்கப் படும்



சுனாமி கடலலைகள் காலை08.45மணியளவில் நாட்டின்கிழக்கு, தெற்கு,வடக்கு, மேல்மாகாண கரையோர ப்பகுதி களை மிக அகோரமாக தாக்கியது. இலங்கையில்

02

காங்கேசன்துறை பகுதியில் பதற்றம்:

## பெண்களை பாலியலுக்கு அழைத்த பொலிஸ் அதிகாரி நையப்புடைப்பு!

( பு.கஜிந்தன் )

காங்கேசன்துறையில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் பெண்ணொருவரை மது போதையில் தவறான உறவுக்கு அழைத்துள்ளதாக காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிஸ்

02

## ரூபவாஹினித் தலைவர் இராஜினாமா



(கனுஷியா புஷ்பகுமார்)

ரூபவாஹினி தொலைக்காட்சியின் தலைவர் பதவியில் இருந்து கலாநிதி செனேஷ் பண்டார திஸாநாயக்க

02

## 'எக்ஸ்பிரஸ்-பேர்ல்' கப்பல் சேதம்: துப்புரவு பணிக்காக ரூ.80 கோடி செலவு

(கனுஷியா புஷ்பகுமார்)

கொழும்பு துறைமுகத்திற்கு அருகாமையில் கடந்த 2021ஆம் ஆண்டு தீப்பற்றியெரிந்த “எக்ஸ்பிரஸ்-பேர்ல்“ (MV-X PRESS PEARL) என்ற கப்பலில் இருந்து சிதறிய பிளாஸ்டிக் மணிகளை சேகரிக்கும் நடவடிக்கைக்காக கடந்த ஆண்டு இறுதி வரையில்

02



## விவசாயிகளுக்கு ரூ.100,000 இழப்பீடு

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் இயற்கை இடர்களால் பாதிக்கப்பட்ட நெல், சோளம், உருளைக்கிழங்கு,பெரிய வெங்காயம்,சோயா மற்றும் மிளகாய் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு 100,000 ரூபாய் இழப்பீடு வழங்க அரசாங்கம்

02





கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான மதுபான சாலைகள் திறக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவற்றை மூடுமாறு கோரி நேற்று (24) கண்டன பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (படம் - ஜதுர்சிகா)

## பேஜர் தாக்குதல்கள்: மொசாட்டின் திட்டம் அம்பலமானது

( ஆர்.மனோசங்கர் )

லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாவை குறிவைக்கும் பேஜர் மற்றும் வாக்கிடோ க்கி குண்டு வெடிப்புத் திட்டத்திற்கு பின்னால், இஸ்ரேலிய உளவு அமைப்பான மொசாட் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் பற்றிய தகவல்களை முன்னாள் உளவாளிகள் வெளிப்படுத்தினர். சமீபத்தில்

02

## 17 இந்திய மீனவர்களுக்கும் 07 வரை விளக்கமறியல்



(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடி யில் ஈடுபட்டதால் நேற்று (24) அதிகாலை தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 17 இந்திய

02

## பேஜர் தாக்குதல்...

மொசாட்டில் இருந்து ஓய்வு பெற்ற இரண்டு மூத்த அதிகாரிகள் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு லெபனானின் தலைநகரான பெய்ரூட்டில், பல ஹிஸ்புல்லா போராளிகள் பேஜர்கள் மற்றும் வாக்கி டோக்கிகள் வெடித்துச்சிதறியதால் கொல்லப்பட்டனர்.

ஹிஸ்புல்லா அமைப்பினர் ஆயிரக்கணக்கான வாக்கி-டோக்கிகள் மற்றும் பேஜர்களை இஸ்ரேலில் தயாரிக்கப்பட்டது என்பதை உணராமல் எப்படி ஏமாற்றப்பட்டனர் என இரு முன்னாள் மொசாட் முகவர்கள் கூறினார்கள்.

இந்த தாக்குதல்களில் பலர் கொல்லப்பட்டதுடன், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர்.

இது ஹிஸ்புல்லா உறுப்பினர்களை மட்டுமே குறிவைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதாக இஸ்ரேல் கூறியது, ஆனால் பாதிக்கப்பட்டவர்களில் பொதுமக்களும் இருப்பதாக லெபனான் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்ரேலும், ஹிஸ்புல்லாவும் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் ஏழாம் திகதி ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலை தொடர்ந்து ஹிஸ்புல்லாவும் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியிருந்தது.

இதனையடுத்து இரு தரப்பினர்களும் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதன் ஒரு பகுதியாக இந்த கடந்த செப்டம்பர் 17ஆம் திகதி லெபனான் முழுவதும் ஒரே நேரத்தில் ஆயிரக்கணக்கான பேஜர்கள் வெடித்தன.

முக்கியமாக ஹிஸ்புல்லாக்கள் இருக்கும் பகுதிகளில் இந்த குண்டுவெடிப்புகள் நடந்ததுடன், இதனால் பெரும் பரபரப்பும் ஏற்பட்டிருந்தது. மறு நாள் வாக்கி-டோக்கிகள் வெடித்து, நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் நடந்து இரண்டு மாதங்களுக்கு பின்னர் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தாக்குதலுக்கு பொறுப்பேற்றிருந்தார். இந்நிலையில், இந்த தாக்குதலின் விபரங்களை சமீபத்தில் மொசாட்டில் இருந்து ஓய்வு பெற்ற மூத்த அதிகாரிகள் வெளிப்படுத்தியுள்ளனர்.

மைக்கேல் என்று பெயரிடப்பட்ட முகவர்களில் ஒருவர், மொசாட் வாக்கி-டோக்கிகளை இயக்கும் பேட்டரிகளுக்குள் ஒரு வெடிக்கும் சாதனத்தை மறைத்து வைத்திருந்ததாகக் கூறினார்.

இது பொதுவாக இதை அணிந்தவரின் இதயத்திற்கு அருகில் வெடிக்கும் வகையில் உருவாக்கப்பட்டிருந்தன என அவர் கூறினார்.10 வருடங்களுக்கு முன்னர் ஒரு போலி நிறுவனத்திடம் இருந்து 16,000 வாக்கி-டோக்கிகளை "நல்ல விலைக்கு" ஹிஸ்புல்லா அறியாமல் வாங்கியதாக அவர் கூறினார்.

"இஸ்ரேலுக்கு எந்த தொடர்பும் இல்லாத வெளிநாட்டு நிறுவனங்களை உருவாக்குவதற்கான நம்பமுடியாத சாத்தியக்கூறுகள் எங்களிடம் உள்ளன" என்றும் மைக்கேல் கூறினார்.

## 17 இந்திய மீனவர்களுக்கு...

மீனவர்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து சட்டவிரோத முறையில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 17 இந்திய மீனவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (24) அதிகாலை தலைமன்னார் கடற்பரப்பில் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 17 மீனவர்களும் தலைமன்னார் கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு முதற்கட்ட விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளின் விசாரணையின் பின்னர் மதியம் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் 17 சந்தேக நபர்களையும் ஆஜர்படுத்திய போது 17 மீனவர்களையும் எதிர்வரும் 7 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இந்திய மீனவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் சட்டவிரோத இழுவை மடி வலைகளை பயன்படுத்தி மீன் பிடித்துக் கொண்டிருக்கும் போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினரால் இரண்டு ரோலர் படகுகளுடன் மீன்பிடியில் ஈடுபட்ட 17 மீனவர்களை கைது செய்திருந்தனர்.

## அரிசி...

அனுமதியளித்திருந்தது. சதொச மற்றும் அரச பல்நோக்குக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக அரிசியை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட சில சிக்கல்கள் காரணமாக தனியார் துறையினருக்கும் அரிசி இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அரசு எதிர்பார்த்த தொகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

என்றாலும், அரிசியை விநியோகிக்கும் முறையில் சில சிக்கல்கள் காணப்படுகின்றன. அரச தலையீட்டுடன் விரைவாக அனைத்து வர்த்தக நிலையங்களிலும் அரிசியை நுகர்வோர் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். தனியார் துறையில் அரசாங்கத்தால் நேரடியான சில தலையீடுகளை மேற்கொள்ள முடியாத நிலையும் காணப்படுகிறது.

இறக்குமதிக்கான கால எல்லை ஜனவரி 10 வரை நீடிக்கப்பட்டுள்ளது. குறித்த காலப்பகுதயில் எதிர்பார்த்த அளவான அரிசி சந்தையில் கிடைக்கப்பெறும். மக்களுக்கு உரிய முறையில் அரிசியை பெற்றுக்கொடுக்கும் அதேவேளை, உள்நாட்டு விவசாயிகளை பாதுகாப்பதும் அவசியமாகும். இந்த இரண்டையும் கையாளும் நோக்கில் அரசாங்கத்தின் தீர்மானங்கள் அமையும்." என்றார்.

## அரசாங்கம்...

ஸ்திரத்தை நோக்கி நகர்ந்துவருகிறது. ஃபிட்ச் மதிப்பீடு கள் இலங்கையின் நீண்ட கால வெளிநாட்டு நாணய வழங்குநர் இயல்புநிலை மதிப்பீட் டை 'RD' இலிருந்து 'CCC+' ஆக உயர்த்தியுள்ளது.

ஃபிட்ச்

பொதுவாக 'ஊஊஊ' அல்லது அதற்குக் குறைவான மதிப்பீட்டைக் கொண்ட நாடுகளுக்கு சிறந்த ஸ்திரத்தன்மை உள்ளதாக கூறாது.

ஆனால், இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளதார ஸ்திரத்தன்மையை கருத்திற் கொண்டு எமக்கு அந்த மதிப்பீட்டை வழங்கியுள்ளது. சமகால அரசாங்கம் பொருளாதார ரீதியாக எடுத்துவரும் தீர்மானங்களின் பயனை 2026ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் மக்கள் அனுபவிக்க கூடியதாக இருக்கும்.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிச்சயமாக அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும் என்பதுடன், மக்களுக்கு சலுகைகளும் கிடைக்கும். அதுதொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை. மக்களின் எதிர்காலத்தை கருதியே எமது தீர்மானங்கள் அமையும். அதேபோன்று அஸ்வெசும பயனாளிகள் தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்படுவதுடன், மேலதிகமாக இணைத்துக் கொள்ளக் கூடியவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது." என்றார்.

## விவசாயிகளுக்கு...

தீர்மானித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிட்ட அமைச்சரை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ,

கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் தரவுகளின்படி, நாடளாவிய ரீதியில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக கடந்த டிசம்பர் மாதம் 2ஆம் திகதிவரை நாடளாவிய ரீதியில் சுமார் 91,300 ஏக்கர் நெற்செய்கைகள் முழுமையாகவும், சுமார் 86,225 ஏக்கர் நெற்செய்கை பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

மேலும், 173 சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் முழுமையாகவும், 1,148 பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. அத்துடன் நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 750 ஏக்கரில் மரக்கறி பயிர்கள் நாசமாகியுள்ளன.

சேதமடைந்த நெற்பயிர்களில் 2 1/2 அல்லது 3 மாத நெல் இரகங்கள் அல்லது பொருத்தமான குறுகிய கால பயிர்களை மீண்டும் பயிரிடுவதற்கு தேவையான விதை நெல்லை வழங்க விவசாய திணைக்களம் செயற்பட்டு வருகிறது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் இழப்பீடு வழங்கப்படும்." என்றார்.

## சுனாமி...

அண்மைக்காலத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களில் பாரிய மனித அழிவுகளையும், சொத்தழிவுகளையும் ஏற்படுத்திய அனர்த்தங்களில் ஒன்றாக இச்சுனாமி அனர்த்தம் பார்க்கப்படுகிறது.

இந்தோனேசியாவின் சுமத்ரா தீவின் கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கமே சுனாமி அலைகளை ஏற்படுத்தி உலக நாடுகள் பலவற்றை தாக்கியது.

இந்நில நடுக்கம் ரிச்டர் அளவில் 9.0 எனவும் அளவிடப்பட்டிருந்தது.

இந்த கடல்கோள் அனர்த்தம் காரணமாக இலங்கையில் ஒரே தினத்தில் சுமார் 42,000 மக்கள் கொல்லப்பட்டனர். பல ஆயிரக்கணக்கான வீடுகளும், கட்டடங்களும், அரச, பாடசாலை கட்டடங்களும் கடலலைகளுக்கு இரையாகின. வீடுகளை, இருப்பிடங்களை இழந்த மக்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர். ஆகக்கூடுதலான இழப்புக்களை கிழக்குமாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களும் வட மாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டமும் சந்தித்தது.

இது தவிர தென்மாகாணத்தில் மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களும் மேல்மாகாணத்தில் களுத்துறை மாவட்டமும் இழப்புக்களை சந்தித்தன. சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட பின் சர்வதேச தொண்டு நிறுவனங்கள் பல இலங்கைக்கு விரைந்து வந்து மக்களுக்கு பல உதவிகளைச் செய்ததுடன் அழிவடைந்த பாடசாலைகள், வைத்தியசாலைகள், குடியிருப்புக்கள் , வீதிகள், பாலங்கள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்து கொடுத்தன.

## பூரணையில்..

புத்தசாசன அமைச்சின் ஆலோசனைக்குழுவின் சிபாரிசிற்கமைய இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த தடையை கடுமையாக அமுல்படுத்துமாறும் மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் கல்வியமைச்சினால் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த தடையை மீறி செயற்படும் அதிபர், ஆசிரியர்களுக்கெதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கையை எடுக்குமாறும் கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் கேட்டுள்ளார்.

இதேவேளை பாசாலைகளில் மேலதிக வகுப்புக்கள் ஏதாயினும் நடாத்த வேண்டி இருப்பின் மாலை 5.00 மணிக்கு பின்னர் வகுப்புக்கள் எதுவும் நடத்தப்படக்கூடாது எனவும் விசேடமாக பாடசாலை தவணை விடுமுறை காலங்களில் மேலதிக வகுப்புக்கள் எதுவும் மாணவர்களுக்கு நடத்தப்படக்கூடாது எனவும் கல்வியமைச்சு ஏற்கனவே அறிவித்துள்ளது .பாடசாலை தவணை விடுமுறைகள் மாணவர்களுக்கு வழங்கப்படுவதன் நோக்கம் மாணவர்களின் உடல், உள, மகிழ்ச்சிகரமான செயற்பாடுகளுக்காக வழங்கப்படுகிறது என்பதை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது.

## அமைச்சர்...

சேவைகளுக்காக பணம் பெற்றுக்கொள்வதாக தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக சுனில் ஹந்துன்நெத்தி முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இந்த முறைப்பாட்டை ஆதாரங்களுடன் சமர்ப்பித்ததாக ஊடகங்களுக் தெரிவித்த அமைச்சர், மக்கள் பிரதிநிதியாகவும், பொறுப்பு வாய்ந்த அமைச்சராகவும் இருக்கும் தன்னைப் போன்றவர்களின் பெயரை பயன்படுத்திக் கூட அச்சமின்றி இதுபோன்ற மோசடிகளை செய்து வருகின்றனர் என கூறினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், "இவ்வாறானதொரு பின்னணியில் பொது மக்கள் இலகுவாக இவ்வாறான மோசடியாளர்களின் இலக்காக மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

சட்டம் அனைவருக்கும் பொதுவானது, இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள சட்டமே இதுபோன்ற மோசடி செய்பவர்களை சட்டத்தின் கீழ் கொண்டு வர போதுமானது.எனக்கும், இதுபோன்ற மோசடிகளில் சிக்கிய மற்றவர்களுக்கும் சட்டம் அமுல்படுத்தப்படும் என்று நம்புகிறேன்.

மேலும், இந்த மோசடியாளர்கள் ஜனவரி 5ஆம் திகதி ஙுழழஅ தொழிநுட்பம் மூலம் பொதுக்கூட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளனர்.அது தற்போது பரப்பப்பட்டு வருவதாகவும், அவ்வாறான பொதுக்கூட்டத்தை தானோ அல்லது தனது கட்சியோ ஏற்பாடு செய்யவில்லை" எனவும் அமைச்சர் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

மேலும், தனது பெயரில் பணம் கேட்கும் இவ்வாறான மோசடியாளர்களுக்கு பணம் வழங்குவதை தவிர்க்குமாறும் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## எக்ஸ்பிரஸ்..

80 கோடியே 20 இலட்சத்து 16,487 ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையம் தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது.

கணக்காய்வு அறிக்கையின்படி, சமூக பங்களிப்பு கொடுப்பனவுகளாக 24 கோடியே 81 இலட்சத்து 92,250 ரூபாயும், உபகரணங்கள், போக்குவரத்து, உணவு மற்றும் இதர செலவுகளாக 55 கோடியே 38 இலட்சத்து 24,237 ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டளவில் நாளாந்தம் சேகரிக்கப்படும் பிளாஸ்டிக் மணிகளின் மொத்த அளவு 44 முதல் 20 கிலோகிராம் வரை குறைந்துள்ளது, எனினும், 2023 ஆம் ஆண்டில் சமூக பங்களிப்பிற்காக செய்யப்பட்ட செலவில் 124 இல் இருந்து 106 மில்லியன் ரூபாயாக 18 மில்லியன் ரூபாய் மட்டுமே குறைக்கப்பட்டுள்ளதாக அறிக்கை கூறுகிறது.

கடற்கரையில் அதிக பிளாஸ்டிக் மணிகள் சிதறிக் கிடப்பதால், கணிசமான எண்ணிக்கையில் துப்புரவு பணியாளர்களை பணியில் அமர்த்த வேண்டும் என்றும், 2021ஆம் ஆண்டை விட 2022இல் கடற்கரையை சுத்தம் செய்பவர்கள் குறைவாக இருப்பினும், செலவு குறையவில்லை என்றும் கடல்சார் பாதுகாப்பு ஆணையம் தணிக்கையில் தெரிவித்துள்ளது.

## ரூபவாஹினி...

இராஜினாமா செய்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், ஆரம்பத்தில் ஊடகத்துறை அமைச்சராக இருந்த விஜித ஹேரத் மூலம் ரூபவாஹினி தொலைக்காட்சியின் தலைவராக செனேஷ் பண்டார திஸாநாயக்க நியமிக்கப்பட்ட நிலையில் கடந்த செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி அமைச்சரிடமிருந்து நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

செனேஷ் திசாநாயக்க பண்டார கொழும்பு நாலந்தா கல்லூரியின் பழைய மாணவர் மற்றும் களனி பல்கலைக்க ழகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்க ழகம், பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் நியூயோர்க் திரைப்பட அகாடமி ஆகியவற்றின் பட்டதாரி ஆவார். அவர் இளங்கலை, கலை முதுகலைப் பட்டம் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சமூக கட்டமைப்பை...

வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி மேலும் கூறுகையில்;

இயேசு கிறிஸ்து பிறந்த தினமான நத்தார் பண்டிகையை உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவர்கள் கோலகலமாக கொண்டாடி வருகின்றனர். துன்பத்தில் இருந்து அனைவரையும் காப்பாற்ற இவ்வுலகின் அவதரித்த இயேசு கிறிஸ்து, ஒருபோதும் ஏழை, பணக்காரன் என்ற கண்ணோட்டத்தில் மக்களைப் பார்த்ததில்லை. அதனால்தான் அன்னார் கடவுளின் குழந்தையாக இவ்வுலகில் பிறந்த நாளில் மிகவும் ஏழ்மையான மற்றும் அப்பாவி மனித சமூகமாக இருந்த மேய்ப்பர்களிடையே பிறக்கத் தேர்ந்தெடுத்தார். இவ்வாறாகத் தான் தேவதூதர்கள் அவர்களுக்கு நற்செய்தியை கொண்டு வந்தார்கள்.

எனவே, நத்தார் தினத்தில் அடிப்படை அர்த்தம், வாத பேதங்களை ஒதுக்கி, மனிதநேயத்தின் பெயரால், மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் செயற்படுவதாகும். நத்தார் தினத்தின் உண்மையான அர்த்தமான அமைதியின் பின்னணியில் இருந்து இந்த நத்தார் பண்டிகையை கொண்டாடி வருவதை உளப்பூர்வமான மகிழ்ச்சியுடன் இங்கு குறிப்பிடுகிறோம். சகல மக்களும் ஒன்றாக ஒரே நோக்கத்துடன் கூட்டுப் பொறுப்பாகக் கருதி, நாட்டின் எதிர்காலத்திற்காக ஒன்றிணைந்த ஒரு காலகட்டத்தை நாம் அடைந்துள்ளோம், அமைதி மற்றும் நல்லிணக்கத்தினால் பிணைந்து பூமியில் ஒரு புதிய விடியலின் அரவணைப்பை நாங்கள் அனுபவித்து வருகிறோம். அந்த பிரகாசமே இயேசு நமக்குக் கொண்டுவந்த அன்பின் விடியலாகும். பிரிவினையின் இருளில் இருந்து விலகி அமைதியுடன் ஆட்சி செய்யும் தோழர்களின் பூமியாக நமது நாடு படிப்படியாக மாற்றப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். மனித சுதந்திரம் மற்றும் நீதியின் அடிப்படையில் யேசுநாதர் செய்த போராட்டத்தின் காரணமாக அவர் புனிதரானார். அந்த மனிதாபிமான சுதந்திரம் மற்றும் நியாயத்தை மதித்து அவருடைய வழிகாட்டுதலை உண்மையாக்க ஒரு அரசாங்கமென்ற வகையில் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

இன்று இலங்கைக்குத் தேவையான சமூக மாற்றம் என்பது பாரியதொரு சமூக மாற்றமாகும். சுதந்திரம் அடைந்து 76 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு சில துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அப்பாற்பட்ட முழு சமூக மாற்றமாகும். இது ஒரு மறுமலர்ச்சியாகும். அந்தத் தேசிய மறுமலர்ச்சிக்காக மிகுந்த அர்ப்பணிப்பு, பொறுமை, நிதானம், அடங்காத துணிச்சல், இடையறாத முயற்சியுடன் பணியாற்றும் நமது அரசைச் சுற்றி திரண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கைகள் எந்த வகையிலும் வீழ்ச்சியடைய விடாது அவர்கள் எதிர்பார்க்கும் "வளமான நாடு-அழகான வாழ்க்கையை" உருவாக்கும்.

## காங்கேசன்துறை...

உத்தியோகத்தர் ஒருவர் நேற்றைய தினம் மாவிட்டபுரம் பகுதியில் உள்ள தையலகத்திற்கு சென்றுள்ளார். அங்கு சென்ற அவர் தையலகத்தில்பணி புரியும் பெண் ஒருவரை தவறான உறவுக்கு அழைத்துள் ளார். அத்துடன் கடைக்கு வந்த இரு யுவதிகளிடமும் முறையற்ற விதத்தில் செயற்பட்டுள்ளார்.

இதன்போது, ஆத்திரமடைந்த குறித்த பெண் தனது கணவருக்கு தொலைபேசியில் தெரிவித்ததையடுத்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் அருகில் வைத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் நையப்புடைக்கப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார்.

இந்தநிலையில், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறித்த பெண்ணை விசாரிக்க முற்பட்ட போது அப்பெண் நடந்த சம்பவத்தை தெரிவித்துள்ளார். இதேவேளை பெண்ணின் உறவினர் தன்னிடம் காணொளியும் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

உடனே குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் குறித்த பெண்ணின் கணவன் மீது பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்குதலும் நடத்தியுள்ளார்.

உடனடியாக பொலிஸார் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை தடுத்து நிறுத்தினர். அதன்பின்னர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பாதிக்கப்பட்டவர்களை அழைத்து சமரசம் பேசியதுடன் முறைப்பாடு பதிவு செய்யவும் தயக்கம் வெளியிட்டார்.

## சமூகங்களுக்குள்..

என தனது கிறிஸ்மஸ் வாழ்த்துச்செய்தியில் யாழ்.ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானபிரகாசம் தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனித அவதாரம் கொண்ட இயேசுவின் அன்பை நினைக்கும் இப்புனித காலத்தில் நாம் மனித உறவுகளில் நம்பிக்கையையும், மன்னிப்பையும், அமைதியையும் ஏற்படுத்த வேண்டும்.

பலரின் மீட்புக்காகவும் நல்வாழ்வுக்காகவும் இறைமகன் எம்மைத் தேடி வந்ததுபோல நாமும் பலரை இன்று தேடிச் செல்லவேண்டியவர்களாக இருக்கின்றோம். இறை இயேசுவின் அன்புக்காக ஏங்கியுள்ள எம் உறவுகளுடன் குறிப்பாக பல்வேறு வகையான துன்ப துயரங்களுக்குள்ளாகி நோயாளிகளாகவும், சிறையிலும், இழப்புக்களைச் சந்தித்தவர்களாகவும், காணாமற்போனவர்களின் உறவுகளாகவும் வாழ்வோரில் குழந்தை இயேசுவின் அன்பைப் பகிர முயல்வோம். ஏழை எளிய மக்களுடன் எம்மிடம் உள்ளவற்றை பகிர்ந்து அவர்களும் இயேசுவின் அன்பை உணர கரம்கொடுப்போம்.

இவ்வாண்டு கிறிஸ்மஸ் விழா, எதிர்வரும் யூபிலி ஆண்டின் ஆரம்பமாக அமைவதால் சிறப்பம்சம் பெறுகின்றது. யூபிலி ஆண்டிற்குள் நுழையும் நாங்கள் நமது குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்குள் அன்புப் பிணைப்பை ஏற்படுத்தி உறவுகளை வலுப்படுத்துவோம். ஒருவரோடு ஒருவர் கொண்டிருக்கின்ற கசப்பான காழ்ப்புணர்வுகளை துண்டித்து மன்னிப்பின் மக்களாவோம். நற்செய்தி விழுமியங்களை வாழ்வில் கடைப்பிடிப்போம். உலக மாயைக்குள் சிக்கி வன்முறைக்குள் வாழும் வாழ்வை வெறுத்து ஒளியின் மக்களாவோம்.

ஆண்டு முழுவதும் இறை அன்பில் உங்களை வழிநடத்த ஆசித்து நிற்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் எம் இதயம் நிறைந்த கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்கள்.

# சமாதானத்திற்கு முன்னுரிமை வழங்கி நத்தாரை அர்த்தமுள்ளதாக்குவோம்

## கிறிஸ்மஸ் வாழ்த்துச்செய்தியில் பிரதமர் தெரிவிப்பு



உண்மையான ஒற்றுமை, நன்றியுணர்வு மற்றும் சமாதானம் என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கி நத்தாரை மகிழ்ச்சி மற்றும் அர்த்தமுள்ளதாக கொண்டாடுவோம் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒற்றுமையுடன் செயற்படுதல், பகிர்ந்து வாழுதல் மற்றும் ஒருவருக்கொருவர் உதவி செய்வதன் ஊடாக எமது உறவுகளும் வலுவானதாக முன்னேற்றமடையும். ஆரோக்கியமான மக்கள் சமூகம் மற்றும் பலம்மிக்க தேசத்தை கட்டியெழுப்பும் பணியானது வீட்டிலிருந்தே ஆரம்பமாகின்றது என்பதை இதுபோன்ற கூட்டு முயற்சிகள் எமக்கு நினைவூட்டும்.

உலகம் முழுவதும் காணப்படும் யுத்த சூழல் காரணமாக சிறுவர்களும் மரணிக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு மத்தியில் நாம் நமது உள்ளங்களில் அமைதியை எதிர்பார்த்து காத்திருக்கின்றோம்.

குடும்பம், சமூகம் மற்றும் உலகம் என்ற அடிப்படையில் மன்னிப்பு வழங்குதல் மற்றும் ஐக்கியத்துடன் இருப்பதன் முக்கியத்துவத்தை நத்தார் பண்டிகை எமக்கு நினைவூட்டுகிறது.இந்த காலத்தில் பரஸ்பர உறவுகளை கட்டியெழுப்பவும், பொறுமையை வளர்த்துக்கொள்ளவும், ஐக்கியம் மற்றும் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் கடமைப்பட்டுள்ளோம். உங்கள் அனைவருக்கும் இனிய நத்தார் வாழ்த்துக்கள்!" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நத்தார் தினத்தின் அர்த்தத்தை புரிந்து நாட்டுக்காக ஒன்றிணைவோம்



நத்தார் தினத்தின் உண்மையான அர்த்தத்தை சரியாக புரிந்துகொண்டு நாமும் ஒரு நாடாக முன்னேற வேண்டிய நேரம் வந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச விடுத்துள்ள நத்தார் தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை நினைவூட்டும் அமைதி மற்றும் அன்பின் அடையாளமாக புனித நத்தார் பண்டிகை உதயமாகியுள்ளது. இறைவனின் அன்பும் மனித கௌரவமும் மனிதநேயம் சார்ந்த சமூகத்திற்கு நம்பகமான அடித்தளத்தை அமைத்தது. அன்று இயேசு நாதர் போதித்த அமைதி, அன்பு, கருணை, சகவாழ்வு, இரக்கம் ஆகியவை இன்றைய நமது சமூகத்தை நாகரீகமாக்க போதுமானதாக இருந்தது. அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தை மையப்படுத்திய நத்தார் பண்டிகை கிறிஸ்தவர்களின் மத விழா மட்டுமல்ல, உலகெங்கிலும் வாழும் அனைத்து இனம், மதம், கட்சி, நிறம், இளையோர், முதியோர் என பாகுபாடின்றி கொண்டாடப்படும் கலாசார விழாவாகவும் உள்ளது. இதன் அர்த்தத்தை சரியாக புரிந்து கொண்டு நாமும் ஒரு நாடாக முன்னேற வேண்டிய நேரம் வந்துள்ளது.

இந்த தருணத்தில் நமது நாடு எதிர்கொள்ளும் வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டுமெனில் நாமும் இனம், மதம், வர்க்கம், கட்சி பேதமின்றி அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன், நல்லிணக்கத்துடன், அன்புடன் செயல்பட வேண்டும். இது நாட்டின் மற்றும் மக்களின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமையும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அப்போது அடுத்த நத்தார் தினத்தைக் கொண்டாடும் வேளையில் ஒவ்வொரு வீட்டிலும் எதிர்பார்ப்பு விளக்குகளுக்கு பதிலாக முன்னேற்றத்தின் விளக்குகள் ஒளிரும்.

இலங்கை வாழ் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் மகிழ்ச்சியான இனிய நத்தார் வாழ்த்துக்களை மனமார வாழ்த்துகிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இறைவனை அடுத்தவரில் இனம்கண்டு மகிழ்ச்சியை அவர்களோடு பகிர்வோம்

## திருமலை ஆயர் வாழ்த்து



ஒடுக்கப்பட்டோரில், தேவையில் இருப்பவர்களில் இறைவனை இனங்கண்டு உதவுவது எமது கடமை. எனவே இக்காலத்தில் இறைவனை அடுத்தவரில் கண்டு எம் மகிழ்ச்சியை அவர்களோடு பகிர்ந்துகொள்வோம் என திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள கிறிஸ்து பிறப்பு பெருவிழா வாழ்த்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இறைவன் மனிதனாக வந்துதித்த மாபெரும் விழாவை நாம் கொண்டாடுகின்றோம். மனிதன் பாவம் செய்தபோது இறைவன் வாக்களித்தவாறே மீட்பரை உலகிற்கு அனுப்பிய விழா இது. இறைமகன் இயேசுவும் இவ்வுலகில் பிறந்து தன்னை சிலுவையில் அர்ப்பணித்ததன் மூலமாக தனது அன்பை வெளிப்படுத்தினார். குழந்தை இயேசுவின் பிறப்பு பற்றிய செய்தி அறிந்து இடையர்களும் ஞானிகளும் வந்து அவரை வணங்கினர். இந்த ஆசீர் எல்லாருக்கும் வழங்கப்படவில்லை. இன்றும் இயேசு நாளாந்தம் எம்மத்தியில் பிறந்தவண்ணமே உள்ளார். தேவையில் இருப்பவர்களில், ஒடுக்கப்பட்டோரில் அவரை இனங்கண்டு உதவுவது எமது கடமை. எனவே இக்காலத்தில் இறைவனை அடுத்தவரில் கண்டு எம் மகிழ்ச்சியை அவர்களோடு பகிர்ந்துகொள்வோம். இதுவே உண்மையான அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்புப் பெருவிழாவாக அமையும். உங்கள் அனைவருக்கும் மீண்டும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா வாழ்த்துக்களைக் கூறி குழந்தை இயேசு உங்கள் உள்ளங்களையும் குடும்பங்களையும் ஆசீர்வதிக்க வேண்டுமென மன்றாடுகின்றேன். குழந்தை இயேசுவில் அன்புள்ள சகோதர சகோதரிகளே! உங்களுக்கு கிறிஸ்து பிறப்பு பெருவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் மார்கழி மாதம் 10ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்:** இன்றைய நாள் சிறப்பான நாள்.

**ரிஷபம்:** நீங்கள் இன்று கவனத்துடன் பணியாற்றுவீர்கள்.

**மிதுனம்:** இன்று சிறப்பான நாளாக இருக்கும்.

**கடகம்:** இன்று தியானம் அல்லது பிரார்த்தனை மேற்கொள்வது மிகவும் அவசியம்.

**சிம்மம்:** இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும்.

**கன்னி:** இன்று ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும்.

**துலாம்:** நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுங்கள்.

**விருச்சிகம்:** இன்று உங்களிடம் ஆன்மீக விழிப்புணர்வு காணப்படும்.

**தனுசு:** இன்று புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கும்.

**மகரம்:** இன்று மிகவும் உற்சாகமான மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்:** இன்றைய நாள் சிறப்பாக இருக்க உற்சாகமாக இருங்கள்.

**மீனம்:** இன்று உணர்ச்சிப்பூர்வமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று இரவு 11 :02 வரை தசமி பின்பு ஏகாதசி.
**நட்சத்திரம்:** இன்று மாலை 04:22 வரை சித்திரை பின்பு சுவாதி.
**யோகம்:** சித்த.
**சந்திராஷ்டமம்:** சதயம்,பூரட்டாதி.
**சூலம்:** வடக்கு.
**இராகு காலம்:** 12:00 PM முதல் 01:30 PM வரை.
**குளிகை:** 10:30 AM முதல் 12:00 PM வரை.
**எமகண்டம்:** 07:30 AM முதல் 09:00 AM வரை.

# தோட்டக் குடியிருப்புகளிலிருந்து தொழிலாளர்களை வெளியேற்ற முயற்சி

## ஜனாதிபதிக்கு மனோ எம்.பி அவசர கடிதம்



தோட்டங்களில் வசிக்கும் மக்களை வெளியேற்றும் முயற்சியை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார். ஜனாதிபதிக்கு அனுப்பிய அவசரக் கடிதத்தில், இரத்தினபுரி, எகலியகொடை மற்றும் சன்டர்லேன்ட் தோட்டத்தில் வசிக்கும் ஏழை மக்கள், தோட்ட நிர்வாகத்தால் வெளியேற்றப்பட முயற்சிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். தோட்டங்களில் பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்த மக்களை தோட்ட நிர்வாகம் வெளியேற்றக் கூடாது என்பதற்காவும், புதிய காணி உரிமை வழங்கும் முன் அங்கு வசிப்பவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் தடை உத்தரவை அறிவிக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இதேபோன்ற பல முயற்சிகளை எதிர்த்த தங்களின் போராட்டங்களை நினைவூட்டிய அவர், “மொடர்ன் ஸ்லேவரி” என்று அடையாளம் காணப்பட்டுள்ள தற்போதைய அமைப்பை முற்றிலும் மாற்ற வேண்டும் எனவும் அழுத்தமாகக் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் தோட்டங்களில் வாழும் மக்கள், எக்காரணம் கொண்டும், தோட்ட நிர்வாகிகளால் வெளியேற்றப் படக்கூடாது என்ற அவசர தடை பணிப்புரையைத் தோட்ட நிறுவனங்களுக்கு ஜனாதிபதி அறிவிக்க வேண்டும் எனவும் குறித்த கடித்தில் குறிப்பிட்டுள்ளார்.

# வெகுஜன ஊடகங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை

(கனூஷியா புஷ்பகுமார்)



அமைச்சுக்களின் செயற்பாடுகள் தொடர்பில் தகவல்களை, அமைச்சர்கள் ஊடகங்களுக்கு தெரிவிக்க வேண்டும் எனவும், ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குவதை தடுக்கும் வகையில் தேசிய மக்கள் சக்தி எவ்வித கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை எனவும் அமைச்சரவை ஊடகப் பேச்சாளர், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்று (24) அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஏதேனும் ஊடகம் ஒன்றிற்கு நேர்காணல் வழங்குவதற்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என நீதியமைச்சர் தெரிவித்த கருத்து தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் வினவிய போதே அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டார். மேலும் கருத்து தெரிவித்த அவர், “எந்த அமைச்சரையும் நாங்கள் தடுக்கவில்லை. ஆனால் இந்த செயல்முறை சில வழிகளில் முறைப்படுத்தப்பட வேண்டும். அமைச்சரவையின் முடிவுகளை இப்படித்தான் வாரந்தோறும் சொல்கிறோம். நீங்கள் அங்கு கேள்விகளைக் கேட்கலாம். அமைச்சின் முடிவுகள் குறித்து அமைச்சர் கூற வேண்டும்.

எல்லாவற்றையும் பற்றி பேச அமைச்சர்களுக்கு நேரம் போதாது. ஏனெனில் அந்த அமைச்சர்கள் அரசுத் திட்டத்தை செயல்படுத்த கடுமையாக உழைத்து வருகின்றனர்” எனத் தெரிவித்தார்.

# நத்தார் தினத்தில் 389 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

(கனூஷியா புஷ்பகுமார்)



நத்தார் தினத்தை முன்னிட்டு 389 சிறைக்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கவுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்தார். பிரதான சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும், 385 ஆண் சிறைக்கைதிகள் மற்றும் 4 பெண் சிறைக்கைதிகளுக்கு இவ்வாறு நத்தார் தினத்தை முன்னிட்டு பொதுமன்னிப்பு வழங்கப்படவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# நாட்டில் உப்பு தட்டுப்பாடு இல்லை

(கனூஷியா புஷ்பகுமார்)

நாட்டில் உப்பு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புக்கள் இல்லை என்பதால் உப்பு கையிருப்புக்கான அவசியம் இல்லை என உப்பு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கனக அமரசிங்க தெரிவித்துள்ளார். உப்பு உற்பத்திக்கு 45 நாட்களுக்கு வறண்ட வானிலை இருக்க வேண்டும் என்றும், எனினும் சமீபத்தில் பெய்த மழை மற்றும் பலத்த காற்று காரணமாக உப்பு உற்பத்தி தடைபட்டதாகவும், அதனால் உப்பு விளைச்சல் குறைந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். எதிர்வரும் மார்ச் மாதம் வரை அது போதுமானதாக இருக்காது என்பதால், உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டால் உப்பை இறக்குமதி செய்வதற்கு கடந்த ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி உப்பு உற்பத்தியாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் யோசனை முன்வைக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். அதன்படி, 2025ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், தொழிற்சாலைகளுக்குத் தேவையான உப்பு விநியோகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டால், 30,000 மெட்ரிக் டொன் உப்பை இறக்குமதி செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# ஜீ.வி.பிரகாஷ்குமாருடன் இணைந்து ஈழத்து சிறுமிகள் பாடல் வெளியீடு



லண்டன் வாழ் ஈழத்துச் சிறுமிகளான வைஷ்ணபி மற்றும் மதுமிதா ஆகியோர் தென்னிந்திய சினிமாவின் முன்னணி இசையமைப்பாளரும் நடிகருமான ஜீ.வி.பிரகாஷ் குமாருடன் இணைந்து பாடியுள்ள “மகளி“ என்ற அல்பம் பாடல் வெளியிடப்படவுள்ளது.

மகளிரின் பெருமைகளைப் பறைசாற்றும் விதமாக அமைந்துள்ள இந்தப் புரட்சிப் பாடலுக்கான வரிகளை பின்னணிப் பாடகரான எம்.கே. பாலாஜி எழுதியுள்ளார். கணேஷ் சந்திரசேகரன் இசை அமைத்துள்ளார். இந்தப் பாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (29)லண்டன் நேரப்படி மாலை 5 மணிக்கு LONDON HAYES பகுதியில் அமைந்துள்ள CRYSTAL HALL இல் நடைபெறவுள்ள பிரமாண்ட இசை நிகழ்ச்சியில் வெளியிடப்படவுள்ளது.

இந்தப் பாடலை ஜீ.வி.பிரகாஷின் தாயாரும், ஏ.ஆர். ரஹ்மானின் சகோதரியுமான ஏ.ஆர். ரைஹானா அறிமுகம் செய்து வைக்க, பிரிட்டன் எம்.பியான எமிலி டார்லிங்டன் வெளியிட்டு வைக்கவுள்ளார். இதற்கிடையில், இந்தப் பாடலை கடந்த 16ஆம் திகதி பிரிட்டன் பாராளுமன்றில், த வொய்ஸ் ஆர்ட்ஸ் குழுவினருடன் எமிலி டார்லிங்டன் எம்.பி. இணைந்து பாடியிருந்தார். இந்தப் பாடலைத் தயாரித்துள்ள The Voice Art நிறுவனத்திடம் பயிற்சி பெற்றவர்கள் இந்திய பிரபல தொலைக்காட்சிகளான விஜய் மற்றும் ஸீ தமிழ் நடத்தும் பாடல் போட்டிகளில் பங்கேற்று திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஒருவனின் நோக்கில்...

No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com


## சமூக சிந்தனையை உலகுக்கு போதித்த கிறிஸ்துவின் பிறப்பு

கிறிஸ்துவின் பிறப்பு இன்று உலகெங்கும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இயேசு பாலனின் பிறப்பை கிறிஸ்தவர்கள் ஒரு இரட்சகரின் வருகையாகப் பார்த்தாலும், மனித வரலாற்றியல் அறிந்தோர் அவரது பிறப்பும் அவரது வாழ்க்கையும் உலகெங்கும் சிந்தனைப் புரட்சியையும் மனித நேயத்தையும் முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு ஏற்படுத்தக்காரணமானது என்றே காண்கின்றனர். அவர் வாழ்ந்த மற்றும் அவருக்கு முற்பட்ட காலம் அடித்தால் திருப்பி அடி, கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல் என்ற கொள்கையை அரசியல் மற்றும் வாழ்வியல் நெறியாகக் கொண்டிருந்தது. உலகெங்கும் அப்படித்தான் இருந்தது. சரியாகச் சொன்னால், இயேசுவுக்கு முன் இவ்வாறான ஒரு சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்திய ஒரு ஞானி இருந்தாரெனில் அவர் கௌதம புத்தராகவே இருந்திருக்க முடியும். எனினும், அவரது வாழ்வும் பணியும் ஆசிய பிராந்தியத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது.

ரோமப் பேரரசு கிறிஸ்தவ மயமான பின்னர் ஐரோப்பாவில் கிறிஸ்தவம் வேகமாகப் காலூன்றியது. கல்வியிலும் மருத்துவத்திலும் மக்கள் அறிவு பெற்று தொழில்புரட்சிக்கு அது வித்திட்டது. பின்னர் ஆசியாவுக்கும் ஆபிரிக்காவுக்கும் விரிந்து சென்று சமூகங்களில் நிலவிவந்த வேற்றுமைகளையும் உயர்வு தாழ்வுகளையும், அச்சமூகங்களை கட்டிப் போட்டிருந்த மூட நம்பிக்கைகளையும் களைவதில் பெரும் பங்காற்றியது.

இருப்பவன் இல்லாதவனுக்கு உதவ வேண்டும், கல்வி அனைவருக்குமானதாக இருக்க வேண்டும். நோயாளர்களுக்கு மருத்துவம் சேவை மனப்பான்மையுடன் செய்யப்பட வேண்டும் என்பதெல்லாம் உலகுக்கு கிறிஸ்தவம் தந்த செய்திகள். இதனால், புரட்சிகரமான சமூக மாற்றங்கள் ஏற்பட்டன. ரஷ்யாவில் லிடோ டால்ஸ்டாய், அமெரிக்காவின் ஹென்றிதோரோ, இந்தியாவில் காந்திஜீ, மார்டின் லூத்தர் கிங் என்போர் உருவாக இயேசுவின் உபதேசங்கள் உதவின.

ஆனால் போர்களும் பிணக்குகளும் நின்றுவிடவில்லை. அழியாத மூர்க்கக் குணத்தையும், அழிவை ரசித்துப் போற்றும் குரூர மனப்பான்மையையும் தன்னுள் கொண்ட மனிதர்கள் இருக்கும்வரை போர்கள் ஒழியப் போவதுமில்லை. இங்கே மதங்களின் வேலை, "சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது" என்ற பாடல் வரிகளைப் போல், குற்றச் செயல்களையும், போர்கள், பிணக்குகளையும் குறைப்பதில் இடையறா செயல்பட்டுக் கொண்டிருப்பதுதான்.

இந்த 2024ஆம் ஆண்டு, ரஷ்ய பிராந்தியத்தில் ஒன்றும் மத்திய கிழக்கில் ஒன்றுமாக இரண்டு யுத்தங்களை விட்டுச் சென்றிருக்கிறது. செயற்கை நுண்ணறிவு ஒரு பக்கம் பலம் வாய்ந்த மற்றொரு மதமாக புதிய சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்தி வருகிறது.

எனவே, மனித நேயத்துக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் வகையில் தாங்கள் மறுபடியும் உத்வேகத்துடன் செயல்பட வேண்டிய அவசியத்தை உலகில் நிலவும் புதிய சூழல்கள் உணர்த்துகின்றன. பகுத்தறிவுவாதிகள் கடவுளை மற, மனிதனை நினை என்பார்கள். மனித நேயத்தையும், பாகுபாடுகள் கடந்து மனிதர்களை நேசிக்கச் செய்வதிலும் கிறிஸ்துவின் போதனைகள் வற்றாத வளத்தைக் கொண்டிருக்கின்றன.

உலகில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை, மரணத்தின் பின்னர் எஞ்சி நிற்பது எது என்ற விடை காணப்பட முடியாத கேள்வி, நன்மை, தீமை, சிலர் சிறப்பான வாழ்விலும் பலர் நீடித்த வறுமை, வாய்ப்பின்மையிலும் உழலும் விசித்திரம், ஏதோ ஒரு சக்தி எம்மை ஆட்டிப் படைக்கிறது என்ற பண்டைய நம்பிக்கை இன்னமும் நீடிப்பது என்பனவே உலகெங்கும் மதங்களுக்கு உயிர் மூச்சாக விளங்குகின்றன. எனினும் சடங்குகளும் சம்பிரதாயங்களும் நிறைந்த மதங்களை பின்பற்றாமலும் கூட சீரிய வாழ்க்கையை வாழ முடியும் என்பதை செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி எதிர்காலத்தில் உணர்த்தக் கூடும். மதங்களைவிட்டு வெளியேறுவோர் எண்ணிக்கை வளர்ந்த நாடுகளில் அதிகரித்து வருவதால் அனைத்து மதங்களும் தம்மை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியத்தை இது ஏற்படுத்தியுள்ளது.

இச் சூழலில் கிறிஸ்துவின் உபதேசங்களும் வழிகாட்டல்களும் வெகு உயிர்ப்புடன் நிகழ்கின்றன என்பதை சுட்டிக்காட்டியாக வேண்டும். எம்மை விட வசதியற்றவர்க்கு உன்னிடம் இருப்பதைக் கொடு, நோயாளியைக் காப்பாற்று, ஏனையோருக்கு தீமைகளை அளந்தால் உனக்கும் அவ்வாறே அளக்கப்படும் என்ற வாழ்வியல் உண்மை என்பன இதுவரை நீர்த்துப் போனதும் இல்லை, எதிர்காலத்திலும் நீர்த்துப் போகாது.

இலங்கையில் கிறிஸ்தவர்கள் பாடசாலைகளையும் மருத்துவ மனைகளையும் அமைத்த பின்னரேயே தமிழர்களும் பௌத்தர்களும் பாடசாலைகளை உருவாக்கினர். உயர் குடியினர் மத்தியில் மட்டும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த கல்வி பொதுவுக்கு வந்தது. மருத்துவவசதி அனைவருக்குமானது. மகாத்மா காந்தியை அஹிம்சை நோக்கி திருப்பியதில் இயேசுவின் போதனைகள் முக்கிய பங்கு வகித்தன. இயேசுவின் மலைப்பிரசங்கம் தன்னை வெகுவாக ஈர்த்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார். ஆங்கில வழிக் கல்வி கற்றிருந்த விவேகானந்தர் இயேசுவின் வார்த்தைகளை நன்கு புரிந்து கொண்டிருந்தார். தொழுநோயாளர்களை வீதிக்கு சென்று அவரால் கவனித்து உதவ முடிந்ததற்கும், பசித்தவனுக்கு முதலில் உணவளித்துவிட்டு பின்னர் நல்வழிகளை போதிப்பாயாக எனக் கட்டளையிட்டதற்கும் அவர் மீதான கிறிஸ்துவின் செல்வாக்கு காரணமானது.

அவரால் நிறுவப்பட்ட இராமகிருஷ்ண மிஷனே சமூக சேவைகளுக்கு முதலிடம் தந்த முதல் இந்து அமைப்பாகும். கிறிஸ்துவின் மொழிகள் இவ்வாறு உலகையே ஆட்கொண்டுள்ளன.

# ஒவ்வொரு உயிரும் இம்மண்ணில் பிறப்பது வாழ்வின் கொடை





கடவுளது மீட்பின் மகத்தான அடையாளங்களைப் பற்றி சிந்திப்பது நம்மை ஒருபோதும் அவரிடமிருந்து தொலைதூர உணர்வை ஏற்படுத்தக்கூடாது, மாறாக நம் அருகில் உள்ள அவரது பிரசன்னத்தையும் அன்பையும் அடையாளம் காண உதவவேண்டும் என்றும் ஒவ்வொரு உயிரும் இம்மண்ணில் பிறப்பது அக்குழந்தைக்கும், அவரது அன்னைக்கும் வாழ்வின் கொடை என்றும் எடுத்துரைத்தார் பரிசுத்த பாப்பரசர் திருத்தந்தை பிரான்சிஸ்.

டிசம்பர் 22 ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் கூடியிருந்த திருப்பயணிகளுக்கு சாந்தா மார்த்தா இல்லக் கோவிலிலிருந்து காணொளி வாயிலாக எடுத்துரைத்த மூவேளை செப உரையின்போது இவ்வாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். உடற்சோர்வு காரணமாக வழக்கமாக மூவேளை செப உரை வழங்கு இடத்தில் அல்லாமல் சாந்தா மார்த்தா இல்லத்தில் இருந்தவாறு காணொளி வாயிலாக தனது கருத்துக்களை எடுத்துரைத்த திருத்தந்தை அவர்கள், குடிலில் வைக்கப்பட இருக்கும் குழந்தை இயேசு திருச்சிலுவையையும் ஆசீர்வதித்தார்.

வானதூதரின் அறிவிப்புக்குப் பின் மரியா முதிர்வயதில் கருவுற்றிருக்கும் தனது உறவினரான எலிசபெத்தை சந்திக்கும் நிகழ்வானது, தாய்மை என்ற சிறப்புக் கொடையைப் பெற்றிருக்கும் பெண்கள் இருவரின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது என்றும், மரியா மீட்பரான இயேசுவைக் கருவுற்றிருக்கிறார் எலிசபெத் மீட்பரின் வருகைக்காக வழியை ஆயத்தம் செய்ய இருக்கும் திருமுழுக்கு யோவானைக் கருவுற்றிருக்கிறார் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

**வானதூதரின் அறிவிப்புக்குப் பின் மரியா முதிர்வயதில் கருவுற்றிருக்கும் தனது உறவினரான எலிசபெத்தை சந்திக்கும் நிகழ் வானது, தாய்மை என்ற சிறப்புக் கொடையைப் பெற்றிருக்கும் பெண்கள் இருவரின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றது**

"இம்மண்ணில் பிறக்கும் எந்த ஒரு குழந்தையும் ஒரு தவறு அல்ல மாறாக வாழ்வின் கொடை" என்றும், எலிசபெத்தைப் போல வயிற்றில் குழந்தையை சுமந்து ஆவலுடன் காத்திருக்கும் கருவுற்ற தாய்மார்களின் அழகை வியந்து போற்றுவோம் இறைவனைக்கு நன்றி கூறுவோம்.

அன்னையருக்கும், அந்த அன்னையரைக் கொடையாக் கொடுத்த இறைவனுக்கும் நன்றியினையும் எடுத்துரைப்போம் என்று கூறிய திருத்தந்தை அவர்கள், கருவுற்ற பெண்களை மதித்து அவர்களை அன்பு செய்வோம் என்றும், பஸ்ஸில் அத்தகையவர்களுக்கு இடமளித்து உதவுவது எதிர்நோக்கு மற்றும் மரியாதையின் அடையாளம் என்றார்.

கிறிஸ்து பிறப்பு நாட்களில் விளக்குகள், அலங்காரங்கள் மற்றும் கிறிஸ்மஸ் இசையுடன் திருவிழாச் சூழ்நிலையை உருவாக்க விரும்பும் நாம் ஒவ்வொருவரும், குழந்தையை கருவில் சுமக்கின்ற அல்லது கைக்குழந்தையை வைத்திருக்கின்ற அன்னையரைக் காணும்போதெல்லாம் மகிழ்ச்சியினை வெளிப்படுத்துபவர்களாக இருப்போம்.

பெண்களுக்குள் ஆசீர் பெற்றவர் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர் பெற்றவரே என்று எலிசபெத் மரியாவை வாழ்த்தியது போலவும், என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப்போற்றுகின்றது என்று மரியா இறைவனைப் போற்றியது போலவும் நாமும் குழந்தைகளுக்கு உயிர் கொடுக்கும் ஆற்றல் கொண்ட அன்னையரையும் வாழ்த்தி போற்றுவோம்.

பாவத்தைத் தவிர, எல்லாவற்றிலும் நம்முடன் பங்குகொள்ள, நம்மைப் போன்ற மனிதனாகக் கடவுள் மாறியதால் நாம் அவருக்கு நன்றி செலுத்துகின்றோமா? பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்காகவும் நாம் இறைவனைத் துதித்து போற்றுகின்றோமா? கருவுற்றிருக்கும் அன்னையரைக் கடந்து செல்லும்போது, கருணையுள்ளவர்களாக நடந்து கொள்கின்றோமா? கருவறை முதல் பிறப்பு வரை குழந்தையின் தூயவாழ்வை மதிப்பை நிலைநிறுத்தி பாதுகாக்கின்றோமா என்று சிந்தித்துப் பார்க்க அழைப்புவிடுத்தார் திருத்தந்தை.

இவ்வாறு தனது மூவேளை செப உரையைத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிறைவு செய்ததும் கூடியிருந்த மக்கள் அனைவருக்கும் தனது அப்போஸ்தலிக்க ஆசீரை வழங்கினார்.










# நத்தார் சிறப்பு மலர்



# மனுக்குலத்தில் கால் பதிக்கும் இறைவன்

ஒரு டிசம்பர் மாதம். குளிர்காலம். மாலை நேரத் தேநீரைக் குடித்துக் கொண்டிருக்கிறார் ஒரு பெண்மணி. திடீரென அவரது வீட்டின் அழைப்பு மணி ஒலிக்கிறது. 'யார் வந்திருப்பார்கள்?' என்று நினைத்துக்கொண்டே கதவின் துவாரம் வழியே பார்க்கின்றார். வாசலில் ஒரு சிறுவனும், சிறுமியும் நின்று கொண்டிருக்கிறார்கள்.

அவர்களைப் பார்த்தாலே 'ஏழைச் சிறுவர்கள்' என்று சொல்லிவிடலாம். ஏனோதானோவென்ற ஆடை, அழுக்குப்படிந்த முகம், சிக்கு விழுந்த தலை. 'என்ன வேண்டும்?' கேட்கிறார் பெண். 'உங்கள் வீட்டில் பழைய செய்தித்தாள்கள் இருந்தால் கொடுப்பீர்களா?' பதில் வருகிறது. 'ஏன்?' பனி மிக அதிகமாக பெய்கிறது. குளிர் அதிகமாக உள்ளது.. இந்தப் பனியில் நடப்பதற்காக பழைய செய்தித்தாள்களை நாங்கள் எங்கள் பாதங்களில் கட்டிக்கொள்வோம். எங்கள் ஆடைகளுக்குள்ளும் வைத்து குளிர்போக்கிக்கொள்வோம்'.

அந்தப் பெண்மணி குனிந்து அவர்களின் பாதங்களைப் பார்க்கின்றாள். அவர்கள் பாதங்களில் கட்டியிருந்த பழைய செய்தித்தாள்கள் பனியில் நனைந்து கிழிந்துகொண்டிருந்தன. விரைவாக



அவர்களை வீட்டிற்குள் அழைக்கின்றாள். அவர்களை சோஃபாவில் அமரச் செய்துவிட்டு அவர்களுக்கு தேநீர் கொண்டு வருகின்றாள். தேநீர்க் கோப்பையைக் கையில் எடுத்தவுடன் சிறுவன், 'அம்மா, நீங்கள் பணக்காரரா?' என்று கேட்கின்றான். அந்தப் பெண்மணி, 'எப்படிக் கேட்கிறாய்?' என, சிறுவன் சொல்கிறான், 'பணக்காரர்கள் வீட்டில்தான் கப்பும், சாசரும் மெட்ச்சாக இருக்கும் என என் அம்மா சொல்லியிருக்கிறார்கள்' என்கிறான்.

அப்போதுதான் அந்தப் பெண்மணிக்குத் தோன்றுகிறது: 'மற்றவரிடம் இல்லாத பல தன்னிடம் இருக்கிறது. அதை நான் உணராமல் அன்றாடம் என் குறைகளையே நினைத்து புலம்புகிறேனே' என்று. தன் வீட்டில் இருந்த குழந்தைகளின் பழைய காலணிகளை அவர்களுக்குக் கொடுத்து, ஆடைகளும் கொடுத்து அனுப்புகின்றாள். கதவை அடைத்து விட்டு உள்ளே வந்து அவர்கள் விட்டுச் சென்ற தேநீர்க் கோப்பையை எடுத்துப் பார்க்கின்றாள். ஆம். அது மெட்ச்சாக இருந்தது. சோபாவின் அருகில் அந்தச் சிறுவர்களின் காலடித்தடங்கள் பழைய செய்தித்தாளின் ஈரத்தோடு ஒட்டியிருக்கின்றன. அதைத் துடைக்காமல் அப்படியே விடுகின்றாள்.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்பு பெத்லகேம் மாடடைக்குடிலில் ஒரு குளிர் இரவில் தன் பிஞ்சுப் பாதங்களைப் பதித்த குழந்தையையும் நமக்கு இதைத் தான் நினைவுபடுத்துகின்றது:

'நாமெல்லாம் செல்வந்தர்கள்'. 'அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார்' (2கொரி 8:9). இறைவனின் பாதப்பதிவுகள் மனுக்குலத்திற்குச்

யெல்லாம் கடந்த கடவுள் மனித நேசத்திற்குள் நுழைந்த இரவு அந்த இரவு. பெயர்களையெல்லாம் கடந்த இறைவன் இம்மானுவேல், இயேசு என்று பெயர் பெற்ற நாள் இந்த நாள். இந்தப் பாதச்சுவடுகள் நம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் பதிய வேண்டும் என்று கிறிஸ்மஸ் குடில்சோடித்து அழகு பார்க்கின்றோம்.



அவரது பிறப்பை அடையாளம் காட்டிய நட்சத்திரம் நமக்கும் நல்வழி காட்ட வேண்டும் என ஒளியால் அலங்கரித்துள்ளோம். கீழ்த்திசையில் உதித்த ஆதவனாய், பாவம் போக்க மனுவுரு எடுத்த நம் மன்னவனின் ஒளி அகஇருள் போக்கி நிறைஒளி தர வேண்டிநிற்கின்றோம். 'வார்த்தை மனிதரானார். நம் நடுவே தன் காலடிகளைப் பதித்தார்' (யோவா 1:18).

நற்செய்தி அறிவிப்பவரின் பாதங்கள் எத்துணை அழகானவை' (எசா 52:7) என்று எசாயா முன்னுரைத்தது இவ்வாறு நிறைவேறுகின்றது. இந்த நற்செய்தி அறிவிப்பவர் இயேசுவே. அவர் கொண்டு வந்த நற்செய்தி அன்பு, மகிழ்ச்சி, அமைதி, நம்பிக்கை.

'நீர் வானங்களைப் பிளந்து இறங்கி வரமாட்டீரா?' (எசா 63:1) என்று வேட்கை கொண்ட எசாயா இஸ்ராயேல் மக்களின் எதிர்பார்ப்பை எடுத்துரைக்கின்றார். இயேசுவின் பிறப்பு மட்டுமல்ல. அவரது பணிவாழ்வும் கூட அவர் இம்மண்ணுலகில் காலூன்றி நின்றதை நமக்குக் காட்டுகின்றது.

செக்கரியாவும் தனது பாடலில் 'நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும், இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகின்றது' (லூக் 1:79) என்று பாடுகின்றார். திருமுழுக்கு யோவான் இயேசுவின் காலடிகளைத் தொடக்கூடத் தகுதியில்லை எனத் தம் வெறுமையை ஏற்றுக் கொள்கின்றார். பாவியான ஒரு பெண் அவரது காலடிகளில் கண்ணீர் வடிக்கின்றார் (லூக் 7:38). மீன்பாட்டைக் கண்டவுடன் சீடர்கள் இயேசுவின் காலடிகளில் விழுகின்றனர் (மாற் 5:22). தொழுகைக்கூடத் தலைவர் யாயீர் காலடிகளில் பணிகின்றார் (மாற் 5:33). தன் இறுதி இராவுணவில் இயேசு தம் சீடர்களின் காலடிகளைக் கழுவியதோடு மட்டுமல்லாமல் அதையே அவர்களும் செய்ய வேண்டும் எனக் கட்டளையிடுகின்றார் (யோவா 13:14).

இயேசுவின் காலடிகளைப் பற்றி விவிலியம் பேசும் இடத்திலெல்லாம், மனுக்குலத்தில் அவர் வேரூன்றி நின்றதுதான் வெளிப்படுகின்றது.

கிறிஸ்து மனுக்குலத்தில் காலூன்றிய இந்த நிகழ்வு நமக்கு மூன்று வாக்குறுதிகளைத் தருகின்றது:

### உடனிருப்பு

இறைவன் மனுக்குலத்தோடு உடனிருக்க இறங்கி வருகின்றார். பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்து இறைவன் உடனிருக்கும் இறைவனாகவே மக்கள் நடுவே திகழ்கின்றார். இறைவன் நம்மோடு உடனிருக்கிறாரெனில், நாம் ஒருவர் மற்றவரோடு உடனிருக்கின்றோமா? நம் உடனிருப்பு மற்றவரின் பிரசன்னத்திற்கு அழகு சேர்க்கின்றதா? அல்லது அழித்து விடுகின்றதா?

### வாழ்வில் வேரூன்றல்

இன்றைய பல தீமைகளில் மிகக் கொடுமையானது 'நம்பிக்கையிழப்பது.' தோல்வியைவிட, தோல்வியைக் குறித்த பயம்தான் நம்மை அதிகமாக பயமுறுத்துகின்றது. கடவுள் மனிதவுரு ஏற்றார். மனிதம் மேன்மையானது. மனிதம் சார்ந்த அனைத்தும் வாழ்வு தருவது. ஆகையால், எதையும் துணிச்சலோடு எதிர்கொள்தல் அவசியம். நம் இறைவன் நாம் அழிவுற நினைக்கும் இறைவனல்லர். நம் வாழ்வு ஒரு கொடை. அந்தக் கொடையைப் பெறுதலே பெரிய பாக்கியம். அதில் மகிழ்வோம்.

### பிரிவினைகள் அழிந்தன்

இறைவன் – மனிதன், ஆண் – பெண், வளமை – வறுமை, நிறைவு – குறைவு என்று மனிதர் வைத்திருந்த அனைத்துப் பிரிவினைகளும் இயேசுவின் பிறப்பில் அழிந்தன. வலுவற்றதை வல்லமை தழுவிக் கொண்டதால் அனைத்துமே வல்லமை பெற்றது. நம் நடுவில் அவர் காலடிகளைப் பதித்தார். நாம் ஒருவர் மற்றவர் வாழ்வில் அன்பினால் கால் பதிப்போம். இம்முறை கிறிஸ்மஸ் பண்டிகையை அர்த்தமுள்ளதாக்குவோம்.

## விடியற்காலை நட்சத்திரமே

அன்பு மனம் மலர்ந்திட
அகிலத்தில் பாவம்
மறைந்திட
அல்லல்பட உதித்த
இளம் விடியலே
மாந்தரின் மதியை
வென்றிட
மண்மீது பொழிந்திட்ட
மகிமைஇன்பமே
மனதாலே பாடுகிறேன்
இனிய தாலாட்டு
தாய்மடியில் கனிந்த
மீட்பரே தாலேலோ...
தங்கத் தாரகை
பெற்ற தவப்புதல்வா
தாலேலோ...
விடியற்காலை
நட்சத்திரமே
தாலேலோ...
விண்ணவரின்
தேவாதிதேவனே
தாலேலோ...
பெத்தலகேம் சூரியனே
தாலேலோ...
மாட்டுதொழுவத்து
மணிமுடியே
தாலேலோ...
மங்கா குலகொழுந்தே
தாலேலோ...
தாலேலோ...
தாலேலோ...
தாலேலோ...
மல்லிகை முல்லை
சம்மங்கி யெடுத்து
மார்கழி குளிரில்
அணிவகுத்து
மரகத ஒளியில்
தீபமேந்தி
மாட்டுத்தொழுவ
நாயகனை
வாழ்த்திடுவோம்...
மண்ணில் பூத்ததோ
விண்ணகப்பூ
மனதினிலே
ஆனந்தத்தின் ஆரம்பம்
மறந்துப்போனது
கண்ணீரும்
கவலையும்
மகிழ்வோம்
அவர்பிறப்பை போற்றி...

-திருமதி ரீனா ரவி





# ஜனாதிபதி செயலக நத்தார் விழா







ஜனாதிபதி செயலகத்தில் வருடாந்தம் நடைபெற்றுவரும் நத்தார் விசேட கரோல் இசை நிகழ்ச்சி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தலைமையில் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

நத்தார் கரோல் இசை நிகழ்ச்சியை முன்னிட்டு ஜனாதிபதி செயலக வளாகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகள் மின்னொளியால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அத்தோடு, இலங்கை இராணுவத்தின் பாடல் குழு மற்றும் இசைக்குழுவினரால் நத்தார் கரோல் கச்சேரி நிகழ்த்தப்பட்டது.

இந்த கிறிஸ்மஸ் கெரோல் இசை நிகழ்ச்சி இன்று 25 ஆம் திகதி இரவு 7.00 மணிக்கு ஜனாதிபதி செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

# ருமேனியத் தூதுவர் பிரதமர் ஹரிணியுடன் சந்திப்பு

இலங்கைக்கான ருமேனியத் தூதுவர் ஸ்டெலுடா அர்ஹிரே, தனது பதவிக்காலத்தை நிறைவுசெய்து நேற்றுமுன்தினம் 23ஆம் திகதி பிரதமர் ஹறிணி அமரசூரியவை பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கைக்கும் ருமேனியாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான அர்ப்பணிப்புக்காக தூதுவருக்கு நன்றி தெரிவித்த பிரதமர், தூதுவரின் எதிர்கால முயற்சிகளுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

எதிர்வரும் ஆண்டுகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் இருப்பதாக பிரதமர் உறுதிப்படுத்தினார்.

இந்த நிகழ்வில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் சகாரிகா போகஹவத்த மற்றும் வெளிவிவகார அமைச்சின் ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவுக்கான பணிப்பாளர் நாயகம் ஷோபினி குணசேகர ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# ஸ்ரீ ஐயப்பசுவாமி ஆலயத்தின் வருடாந்த பாற்குட பவனி

(உடப்பு க.மகாதேவன்)

புத்தளம் மாவட்டத்தில் பிரசித்தி பெற்று விளங்கும் உடப்பு வம்பிவட்டான் பகுதியில் குடிகொண்டுள்ள ஸ்ரீ ஐயப்பசுவாமி ஆலயத்தின் வருடாந்த நிகழ்வான பாற்குட பவனி நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.




புத்தளம் மாவட்டத்தில் முதன் முதலில் அமைக்கப்பட்ட இந்த ஆலயம் இன்று புகழ் பெற்று விளங்குகின்றது.

ஐயப்பன் மாலை அணிந்த சாமிமார்கள் உடப்பிலிருந்து பாற்குடம் சுமந்த வண்ணம் வம்பிவட்டான் ஆலயத்தை வந்தடைந்தனர்.இவர்கள் எதிர்வரும் சில தினங்களில் இந்தியாவிலுள்ள சபரிமலை ஐயப்பசுவாமி ஆலயத்தை அடைந்து,அங்கு தரிசனம் செய்து "ஜோதி பூஜை" கண்டவுடன் மீண்டும் இவர்கள் இலங்கையை வந்தடைவார்கள். பின்னர் அவர்களின் மாலை ஆலயத்தில் வைத்து பிரதம குருசாமியினால் கழற்றப்படும்.குருசாமி சின்னையாதாஸ் தலைமையில் இவர்கள் இந்தியா செல்வது குறிப்பிடத்தக்கதாகும்.

# சுவிஷேச தரிசன மிஷனரி திருச்சபையின் நத்தார் நிகழ்வு







உலகிற்கு அமைதியும் சமாதானத்தையும் எடுத்துரைக்கும் இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினமான நத்தார் பண்டிகையை உலகெங்கிலும் வாழும் கிறிஸ்தவர்கள் கொண்டாடி வருகின்றனர். அந்த வகையில் கொழும்பு 9 சுவிசேஷ தரிசன மிஷனரி ஊழியங்கள் திருச்சபையின் நத்தார் கொண்டாட்டம் நேற்றுமுன்தினம் இரவு தலைமைப் போதகர் – அப்போஸ்தகர் விஷ்வா தலைமையில் கொழும்பு என். எம். பெரேரா கேந்திர நிலையத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதன் போது, ஆரம்ப பிரார்த்தனையுடன் சபையின் இளையோர் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆடல், பாடல், சமூக நாடகம் என பல்சுவை அம்சங்கள் இடம்பெற்றிருந்தன. இதனைத் தொடர்ந்து கிறிஸ்துமஸ் தாத்தாவின் வருகையும் திருச்சபை சிறுவர்கள் மற்றும் இளையோர் குழுவினருக்கான நத்தார் பரிசுகளும் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் "சுவிசேஷ தரிசன மிஷனரி ஊழியங்கள்" திருச்சபையின் தலைமைப் போதகர் – அப்போஸ்தகர் விஷ்வாவுடன் போதகர் ராதாகிருஷ்ணன் நாயுடு, போதகர் ஜரீனா மற்றும் போதகர் மைக்கேல் ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர். நிகழ்வைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த திருச்சபையின் தலைமைப் போதகர் – அப்போஸ்தகர் விஷ்வா;

இலங்கை நாடு முழுவதும் இயேசு கிறிஸ்துவின் வெளிச்சமாகிய அருட் பார்வை கடந்து செல்ல வேண்டும். ஏனெனில் பிரச்சினை என்னும் இருளில் வாழும் மக்களுக்கு இயேசுவின் வெளிச்சம் ஊடாக வாழ்வு வளம் பெற்று மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ பிரார்த்திப்போம். அத்தோடு, இலங்கையின் பழைய ஆட்சியாளர்களிடமிருந்து புதிய ஆட்சியாளராக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதனூடாக நிறைய மாற்றங்களை நாங்கள் பார்க்கிறோம், ஆகவே அவருக்கு ஒத்தாசையாகவும், நாடு மேலும் ஆசிர்வதிக்கப்படுவதற்காகவும், இந்த தேசம் அனைத்து மக்களுடைய ஆசிர்வதிக்கப்பட்ட தேசமாக மாறவும் நாங்கள் இந்த தினத்திலே கர்த்தராகிய ஆண்டவரிடம் வேண்டுகிறோம் என்றார்.

# சட்டவிரோத மின்சார வேலிகள் ; காட்டுயானைகள் அழியும் ஆபத்து

காட்டு யானைகளை விரட்டுவதற்காக சட்டவிரோதமாக மின்சார வேலிகள் அமைப்பதால் காட்டுயானைகள் பலியாகும் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. இதனால் காட்டுயானைகள் இலங்கையில் இல்லாமல் போகக்கூடிய நிலை ஏற்படும் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே, காட்டு யானைகளைப் பாதுகாக்க மக்களின் ஆதரவை எதிர்பார்ப்பதாகவும் இதேவேளை, வேலிகள் அல்லது கம்பிகளுக்கு அனுமதியின்றி மின்சாரம் வழங்குவது குறித்து 0112118767 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது 1987 என்ற அவசர இலக்கத்தினூடாக, இலங்கை மின்சார சபைக்கு உடனடியாக அறிவிக்குமாறு அந்த அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



இலங்கை மின்சார சபையின் கூற்றுப்படி, 2024ஆம் ஆண்டு முதல், அனுமதியற்ற மின்சார வேலிகள் மற்றும் கம்பிகளின் பாவனை காரணமாக சுமார் 50 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டவிரோதச் செயல்கள் தொடர்பாக, ஏற்கனவே உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக, மின்சார சபை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புதிய அர்த்தம் தரும் கிறிஸ்மஸ் பண்டிகை

கிறிஸ்மஸ் என்றவுடன் எல்லோருக்கும் முதலில் நினைவுக்கு வருவது தடபுடல் விருந்துதான். ஆனால் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் துவங்கிய பின்னணியும், அதில் ஏற்பட்ட பல மாறுதல்கள் குறித்தும் பலருக்கும் தெரியாது. இயேசு கிறிஸ்துவின் பிறந்த தினம்தான் கிறிஸ்மஸ் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆனால் இயேசுநாதர் எப்போது பிறந்தார், கிறிஸ்துமஸ் என்ற வார்த்தையின் பின்னணி ஆகியவை சுவாரஸ்யமானது.

கிறிஸ்மஸ் என்ற வார்த்தை "கிறிஸ்ட் மாஸ்" என்ற 2 வார்த்தைகளின் இணைப்பு மூலம் உருவானது. இயேசு கிறிஸ்து பிறந்த ஆண்டு சரியாக தெரியவில்லை என்பதால், கிமு 7க்கும் கிமு 2க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் பிறந்திருக்கலாம் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

அதேபோலவே யூதர்களின் பருவகாலம், நாள் காட்டிகள் மூலம் கணக்கிட்டு, ஒரு யூக அடிப்படையில் தான் டிசம்பர் 25ம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகையாக கொண்டாடப்படுவதாக சில வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

கிறிஸ்மஸ் பண்டிகையை முதன் முதலில் 4வது நூற்றாண்டை சேர்ந்த மேற்கத்திய கிறிஸ்தவர்கள் கொண்டாடியதாக வரலாற்று குறிப்புகள் உள்ளன. எப்படி இருப்பினும் கிறிஸ்துமஸ் பண்டிகை என்பதை உலகம் முழுவதும் கிறிஸ்தவ மக்கள் மிகச் சிறப்பான நாளாக கொண்டாடி மகிழ்கின்றனர். இந்தத் தினத்தை கிறிஸ்தவர்கள் விசேஷமாக கருதுவதால் அன்றைய தினம் பல புதிய பணிகளைத் தொடங்குவதையும் அவர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். கிபி 800ம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகை அன்று, சார்லிமேனி என்ற பேரரசன் மன்னராக பதவியேற்றான். அதன்பிறகு கிபி 855ம் ஆண்டு இட்முண்ட் என்ற தியாகி மன்னராக மூடி சூட்டப்பட்டான். கடந்த 1066ம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் வில்லியம் 1 மன்னராக முடிசூட்டப்பட்டார். மேலும் 1377ம் ஆண்டு இங்கிலாந்து மன்னன் ரிச்சார்ட் 2 கிறிஸ்மஸ் பண்டிக்கையை மிக விமர்சியாக கொண்டாடினார்.

கடந்த 1643ம் ஆண்டு இந்தோனேஷியாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தீவுக்கு "கிறிஸ்மஸ் தீவு" என்று பெயரிடப்பட்டது. இப்படி கிறிஸ்மஸ் பண்டிகை நாட்டு மக்களிடையே பிரபலமடைந்து, பின்னர் உலகமெங்கும் விமரிசையாக கொண்டாடும் வழக்கம் உருவானது. கிறிஸ்மஸ் பண்டிகை அன்று மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள பரிசுப் பொருட்களை பரிமாறி கொள்வதும், போட்டிகளை நடத்துவது என்று பல கோணங்களில் கொண்டாட்டம் விரிவடைந்தது. கிறிஸ்மஸ் பண்டிகைக்காக முதன்முதலில் கிறிஸ்மஸ் மரம் வைக்கும் வழக்கம், 1510ம் ஆண்டும் ரிகா என்ற இடத்தில் துவங்கியது. கடந்த 1836ம் ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகைக்கு அலபாமா என்ற பகுதியில் அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. 1840ம் ஆண்டு இங்கிலாந்தில் முதன் முதலாக கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் வழக்கம் துவங்கியது. கிறிஸ்மஸ் பண்டிகையின் போது கிறிஸ்தவர்கள் குழுக்களாக சேர்ந்து கரோல்ஸ் என்ற நிகழ்ச்சியை நடத்துகின்றனர். இந்த நிகழ்ச்சியில் குழந்தை இயேசுவை வாழ்த்தியும், அவரது பிறப்பு, அவர் உலகில் வந்த நோக்கம் உள்ளிட்ட கருத்துகளை கொண்ட பாடல்கள் பாடப்படுவது வழக்கம்.

கடந்த 1847ம் ஆண்டு பிரான்சில் தான் முதல் முதலாக கிறிஸ்மஸ் கேரல் சர்வீஸ் நடத்தப்பட்டதாக தெரிகிறது. இந்த கேரலில் "ஓ ஹோலி நைட்" என்ற பிரபல கிறிஸ்மஸ் பாடல் பாடப்பட்டதாக கூறப்படுகிறது.

# விவசாய நிலங்களில் பாரிய மண் அகழ்வு

## நேரில் ஆராய்ந்த இளங்குமரன் எம்.பி



யாழ். – தென்மராட்சி – கரம்பகம் பிரதேசத்திலுள்ள வீதி மற்றும் விவசாய நிலங்களில் மண் அகழ்வு இடம்பெற்றுவரும் இடங்களை நாடாளுமன்ற உறுப்பினர் கணநாதன் இளங்குமரன் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று நேற்று முன்தினம் பார்வையிட்டனர்.

கரம்பகத்திலுள்ள விடத்தற்பளை – கரம்பகப் பிள்ளையார் இணைப்பு வீதி மற்றும் விவசாய நிலங்களில் அண்மைக் காலமாகச் சட்டவிரோத மண் அகழ்வு இடம் பெற்றுவருகிறது. இதனைக் கண்டித்து பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த விவசாய வீதியில் நெடுங்காலமாக மணல் வீதியாகவே இருந்து வந்துள்ளதோடு, பிரதேச விவசாயிகள் தங்களது விவசாய உற்பத்தி பொருட்களை எடுத்துச் செல்வதற்குச் சிறந்த வீதியாக இதனைப் பயன்படுத்தியும் வந்துள்ளனர்.

இந்நிலையில், மண் அகழும் இயந்திரத்தின் உதவிக் கொண்டு 25க்கும் மேற்பட்ட டிப்பர் மண் வீதியிலும், வீதி ஓரங்களிலும் அகழப்பட்டுள்ளது.

இவ்வாறிருக்கையில், இப் பிரதேசத்தில் சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுவதாகவும், அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்நிலையில், தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கணநாதன் இளங்குமரன், சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி. உஷா சுபலிங்கம், கரம்பகம் கிராம அலுவலர் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து மண் அகழ்வு இடம் பெற்றுள்ள இடங்களைப் பார்வையிட்டுள்ளனர்.

# யாழ். வர்த்தக நிலையங்களில் திடீர் சுகாதார பரிசோதனை



**▪ பு.கஜிந்தன்**

பண்டிகை காலத்தை முன்னிட்டு நேற்று (24) யாழ்.நகர்ப் பகுதியில் உள்ள உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சுகாதார பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

உணவகங்கள் மற்றும் இதர வர்த்தக நிலையங்கள் உள்ளடங்கலாக 28 வர்த்தக நிலையங்களில் இந்த பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதில் 11 கடைகளில் குறைபாடுகள் இருப்பது அவதானிக்கப்பட்டன.

அந்த வர்த்தக நிறுவனங்களில் வியாபாரத்துக்காக வைக்கப்பட்டிருந்த 9 வகையான உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டன. அத்துடன் நான்கு கடைகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிப்பின் பேரில், சுகாதார வைத்திய அதிகாரி, தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி, தாய்சேய் நல வைத்திய அதிகாரி மற்றும் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து இந்த கள பரிசோதனையை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிறிஸ்மஸின் உண்மையான உணர்வை நினைவில் கொள்வோம்



### வடக்கு ஆளுநரின் நத்தார் வாழ்த்து

கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடும் அனைவருக்கும் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

யேசு பாலன் பிறப்பை நாம் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் கொண்டாடுகையில் கிறிஸ்மஸின் உண்மையான உணர்வை நினைவில் கொள்வோம்.

அவர் வெளியிட்ட கிறிஸ்துமஸ் வாழ்த்து செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அன்பை – கருணையைப் பரப்புதல், மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுதல், மற்றவர்களுக்கு இரங்குதல் – உதவி செய்தல் மற்றும் அனைத்து சமூகங்களிடையேயும் நல்லிணக்கத்தை வளர்ப்பது என்ற எண்ணங்களை மனதிலிருத்துவோம்.

இந்த மகிழ்ச்சியான பண்டிகையை நாம் கொண்டாடும்போது, எம்மைச் சூழ்ந்திருப்பவர்களில் உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு நம் இதயங்களையும் கைகளையும் நீட்டுவோம். புத்தாண்டை நெருங்கி வரும் இவ்வேளையில், வடக்கு மாகாணத்துக்கும் எமது தேசத்துக்கும், அமைதி, செழிப்பு மற்றும் முன்னேற்றத்தை நோக்கித் தொடர்ந்து பணியாற்ற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.கிறிஸ்மஸின் ஒளி நம் பாதைகளை வழிநடத்தட்டும். மேலும் இந்தப் பண்டிகையின் ஆசீர்வாதங்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் மகிழ்ச்சியையும் நிறைவையும் கொண்டு வரட்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கிளி.யில் அதிகரித்த மதுபான சாலைகள்

### பொது மக்கள் ஆர்ப்பாட்டம்



**▪ ஜதுர்சிகா**

கிளிநொச்சியில் அதிகரித்த மதுபான சாலைகளை மூடுமாறு கோரி நேற்று (24) கண்டன பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகமான மதுபான சாலைகள் திறக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்துக் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டம் கிளிநொச்சி பசுமைப்பூங்கா முன்றலில் இருந்து ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை முன்னெடுக்கப்பட்டது

பேரணியைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜரை மத தலைவர்கள் இணைந்து மாவட்ட அரச அதிபர் சு.முரளிதரனிடம் கையளித்துள்ளனர்.

போராட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் சமூக அமைப்புகள், மதத் தலைவர்கள் மற்றும் வர்த்தக சங்கத்தினர், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

**வேலணை வங்களாவடி**

# வைத்தியசாலை மூடப்படும் அவல நிலையில்

**▪ பு.கஜிந்தன்**

வேலணை வங்களாவடி பிரதேச வைத்தியசாலையின் ஆளணிப் பற்றாக்குறையால் மருத்துவ சேவைகள் குறைக்கப்பட்டு பகுதியளவில் இழுத்து மூடப்படும் நிலைக்கு வந்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

தீவகப் பிரதேசத்தின் இரண்டாவது பிரதான வைத்திய சாலையாகவும் தீவகத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளதுமான குறித்த வைத்தியசாலை கடந்த நல்லாட்சிக் காலத்தில் அன்றைய சுகாதார அமைச்சராக இருந்த ராஜித சேனரத்னவினால் “பி” தரத்திற்கு அவசர அவசரமாக தரமுயர்த்தப்பட்டது.

ஆனாலும் குறித்த தரத்திக்கு ஏற்ப ஆளணி வளங்களை நிவர்த்திக்கும் எந்தவிதமான பொறிமுறையையும் அப்போதைய அமைச்சர் ஏற்படுத்தவில்லை. அதன் பின்னரும் அமைக்கப்பட்ட அரசாங்கங்களில் இவ்விடயம் தொடர்பில் பல தடவைகள் உரிய தரப்பினரது பார்வைக்குக் கொண்டு செல்லப்பட்டபோதும் அது கண்டுகொள்ளப்படாத நிலையிலிருந்து வந்தது.

ஆனாலும் குறைந்தளவான ஆளணி வளங்களைக் கொண்டு குறித்த வைத்தியசாலையின் தரத்துக்கு ஏற்ப 24 மணி நேரமும் குறைந்த ஆளணியுடன் சேவை முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக இரு வைத்தியர்களே இவ்வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்ட நிலையில் அவர்கள் இரவு பகலாக ஓய்வின்றி, தமக்கான விடுப்புகள் இன்றி சேவை செய்யும் நெருக்கடிக்கு உள்ளாகியிருந்தனர்.

இதேபோன்று தாதியர் பற்றாக்குறையும் இவ்வைத்திய சாலையில் பல ஆண்டுகளாக இருந்து வருகின்றது.இவ்விடயமும் அலட்சியப் போக்காகப் பார்க்கப்பட்டுக் கைவிடப்பட்டது.

ஆனாலும் குறித்த வைத்தியசாலையில் மாதாந்தம் 2500 இற்கும் அதிகமான நோயாளர்களும் வருடாந்தம் 30 ஆயிரத்திற்கும் அதிகமான நோயாளர்களும் சிகிச்சை பெற்றுவந்ததற்கான ஆதாரங்களும் வைத்தியசாலை பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம் குழந்தை பிரசவ விடுதி உள்ளிட்ட பல சிகிச்சை தொகுதிகளைக் கொண்டுள்ள இந்த வைத்தியசாலை நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு மண்டைதீவு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய தீவகத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ளதானது நோயாளர்களின் அவசர தேவைகளை நிவர்த்தி செய்யும் ஒரு நிலையமாகவும் இருந்து வருகின்றது அத்துடன் அம்பியூலன்ஸ் வசதியும் இல்லை.

இந்நிலையில் வரும் ஜனவரி மாதம் முதல் குறித்த வைத்திய சாலையின் மருத்துவ சேவை மாலை 6 மணியுடன் நிறுத்துவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான அறிவுறுத்தலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

புதிய அரசின் பின்னர் புதிய மாற்றங்கள் வரும் என நம்பி வாக்களித்த மக்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் இந்த சேவைக் குறைப்பை இடைநிறுத்தி வைத்திய சாலைக்கான ஆளணிக் குறையை நிவர்த்தி செய்து தொடர்ந்தும் வேலணை மக்களுக்குக் குறிப்பாகத் தீவக மக்களுக்கு 24 மணி நேரச் சேவையைக் குறித்த வைத்தியசாலை ஊடாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# யாழில் உயிரிழந்த இராணுவ வீரர்

பலாலி இராணுவ முகாமில் கடமையாற்றிய சாஜன் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.உயிரிழந்தவர் கடவெலகெதற, குருநாகலை பகுதியைச் சேர்ந்த ரவித்த ரங்கன திசாநாயக்க (வயது –35) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

பலாலி இராணுவ முகாமில் கடமை ஆற்றி வந்துள்ள நிலையில் ஞாயிற்றுக் கிழமை(22) காலை நெஞ்சுவலி காரணமாக பலாலி இராணுவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்ட நிலையில் அவர் நண்பகல் உயிரிழந்துள்ளார்.

# வல்வெட்டித்துறையில் எம்.ஜி.ஆரின் 37ஆம் ஆண்டு நினைவுதினம்



**▪ பு.கஜிந்தன்**

தமிழக முன்னாள் முதல்வரும் புரட்சித் தலைவருமான எம்.ஜி.இராமச்சந்திரனின் 37ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை ஆலடியில் உள்ள எம்.ஜி.ஆர் நினைவுத் தூபியில் உள்ள எம்.ஜி.ஆரின் திருவுருவச் சிலைக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

இவ் நினைவஞ்சலிக்கு ஏற்பாடுகளை செய்திருந்த வல்வெட்டித்துறை எம்.ஜி.ஆர் நற்பணி மன்றத்தின் தலைவர் தில்லையம்பலம் ஜெயராஜ்(ராசு) தலைமையில் சக உறுப்பினர்களும் கலந்து அஞ்சலி செலுத்தியுள்ளார்கள்.

# வருடாந்த ‘பிரபஞ்ச நல’ தவ வேள்வி



தென்னிந்தியாவின் திருமூர்த்தி மலையில் அமைந்துள்ள தென்கையிலை உலக சமாதான ஆலயத்தில் வருடந்தோறும் உலக வாழ் மக்களின் நன்மைக்காக, பிரபஞ்சத்தில் சாந்தியும் சமாதானமும் அமைதியும் வேண்டி நடத்தப்பட்டு வருகின்ற பிரபஞ்ச நல மகாதவ வேள்வித் தொடர் வரிசையில் இவ்வாண்டிற்கான 35ஆவது தவவேள்வி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்த வேள்வி கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகியது. எதிர்வரும் 12.01.2025 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை சிறப்பாக நடைபெறவுள்ளது. இக்காலத்தில் 21 நாட்கள் தொடர்ச்சியாக ஞானவள்ளல் குருமகான் அவர்கள் தவவேள்வியினை பிரணவாலயத்தின் தவபீடத்திலிருந்து இயற்றி வருகிறார். இந்நிகழ்வுகளையொட்டி உலகெங்கும் ஆன்மிக பொதுக்கூட்டுப் பிரார்த்தனைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

இக்காலைப்பகுதியில் பல்வேறு நாடுகளிலும் கூட்டுப்பிரார்த்தனைகள் மற்றும் சத்சங்கம், அருளுரைகள், அன்னதானங்கள் என்பன நடைபெற ஏற்பாடாகியுள்ளன. அந்தவகையில், உலக சமாதான ஆலயத்தின் யாழ்ப்பாண கிளையினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியிலிருந்து காலை 8.30 மணிவரை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மண்டபத்தில் திருமூர்த்தி மலையிருந்து நிகழ்வுகள் நேரடியாக அஞ்சல் செய்யப்பட்டதுடன் கலந்து கொண்டவர்களுக்கு இறை பிரசாதங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஏராளமான மெய்யன்பர்கள் கலந்து சிறப்பித்துள்ளதுடன் திருமதி. ஆஷா பாலகுமார் தலைமையில் சர்வசக்தி சித்தி வழிபாடும் இடம்பெற்றது. இதேவேளை குருமகான் தியான வேள்வியினை நிறைவு செய்யும் இறுதிநாளாகிய எதிர்வரும் 12.01.2025 அன்று உலக சமாதான ஆலயத்தின் யாழ்ப்பாண கிளையினாலும் காலை 10.00 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணிவரை நிகழ்வுகளை நிகழ்நிலை ஊடாக நேரடியாக அஞ்சல் செய்யப்படவுள்ளதுடன் நிகழ்வில் கலந்து கொள்பவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.



*இராணுவத்தின் 51ஆவது படைப் பிரிவின் கீழ் இயங்கும் 513ஆவது பிரிகேட்டின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் வயோதிபர்களுக்கான உதவிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று கலந்து கொண்டு பிரிகேட் வளாகத்தில் அவர்களுக்கான உதவிகளை வழங்கி வைத்தார்.* **படங்கள் : பு.கஜிந்தன்**

# சட்டஆட்சி பலம் பெற்றால் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்



(வெல்லாவெளி நிருபர்)

சட்டஆட்சி பலம் பெற்றால் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர்களனெத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.சிறிநேசன், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சட்டஆட்சியைப் பலப்படுத்தப்போவதாகக் கூறியுள்ளது.

குறிப்பாக, ஜனாதிபதியின் கொள்கை விளக்கவுரையின் போது இக்கருத்து வலியுறுத்தப்பட்டிருந்தது. அக்கருத்தின்படி சட்டஆட்சி பலமடைந்தால், பாரிய குற்றங்களைச் செய்த குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார். ஊடகங்கக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டடுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

இந்நாட்டில் நடைபெற்ற யுத்த காலத்தின்போது பல தலைவர்கள், புத்தியாளர்கள், கல்வியாளர்கள், ஊடகவியலாளர்கள், போராளிகள், பொதுமக்கள் பலர் கடத்தப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளனர்.

அதனைச் செய்தவர்கள் தண்டிக்கப்படாமல் உள்ளதோடு மட்டுமல்லாமல், கௌரவர்களாக உலாவி வருகின்றனர். அவர்களில் பலர் அதிகார சக்திகளால் பாதுகாக்கப்பட்டும் வருகின்றனர். சட்டஆட்சி வலுப்பெற்றால், இத்தகைய குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது உறுதியாகும்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜ சிங்கம், ரவிராஜ், சந்திரநேரு, சிவநேசன் ஆகிய தலைவர்கள் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மேலும், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரும் பேராசிரியருமான ரவீந்திரநாத் தலைநகரில் கடத்தப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டதாக அறிய முடிகின்றது.

சிரேட்ட விரிவுரையாளர் தம்பையா அவரது வீட்டில் இருக்கும் போது பகலில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார். பிறேமினி தனுஸ்கோடி, சதிஸ்கரன் உட்பட தமிழர் புனர்வாழ்வுக் கழக உத்தியோகத்தர்கள் சிலர் கடத்தப்பட்டு பொலன்னறுவை தீவுச்சேனையில் கொல்லப்பட்டதாக அறியப்படுகிது.

மேலும் திருமலை விக்கினேஸ்வரன் சுட்டுக்கொல்லப்பட்டார். சிவராம், நடேசன், லசந்த விக்கிரமதுங்க, எக்னலிகொட, நிமலராஜன் போன்ற 40 இற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் 2006 தொடக்கம் 2015 இற்கு இடைப்பட்ட காலத்தில் கடத்தப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளனர். தேற்றாத்தீவில் பொறியியலாளர் திருமதி லோகேஸ்வரன் என்ற பெண்மணியான ஒரு பச்சைக் குழந்தையின் தாய் பெற்றோரின் கண்களுக்கு முன்னால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலில் பல நூற்றுக்கணக்கான அப்பாவி கிறிஸ்தவ பக்தர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் இச்சம்பவங்களுடன் தொடர்பான குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. இதனால் நாட்டின் மனிதவுரிமைகள் சட்டஆட்சி ஜனநாயகம் போன்ற விடயங்கள் கேவலபடுத்தப்பட்டன.

இவற்றுக்கெல்லாம் உரிய பரிகாரம் தேவையென்றால், சட்டஆட்சி பலப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு முறையாக விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.சிறிநேசன் குறிப்பிட்டுள்ளார்.

# ஒருங்கிணைப்பு குழுவின் தலைவராக பிரதி அமைச்சர் அருண்



(கிண்ணியா கியாஸ் ஷாபி)

புதிய அரசாங்கத்தின் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா நேற்று (24) உத்தியோகபூர்வமாக தனது கடமைகளைப் பொறுபேற்றுக் கொண்டார். இவர் உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்ற பின்னர், புதிய அரசாங்கத்தின் புதிய ஆண்டுக்கான மாவட்டத்துக்கான, முதலாவது அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை நடத்தினார். இந்தக் கூட்டத்தில், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர மற்றும் மாவட்ட அரச திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# விவசாயிகளுக்கு இலவச பசளை



(எம்.என்.எம்.புஹாரி)

திருகோணமலை –தோப்பூர் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட நஜா விவசாய சம்மேளன விவசாயிகளுக்கு ரஷ்யா அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இலவச பசளை(MOP) விநியோகம் நேற்று செவ்வாய்கிழமை (24) இடம்பெற்றது.

இதன்போது நஜா விவசாய சம்மேளனத்திற்குட்பட்ட 213 விவசாயிகளுக்கு ரஷ்யா அரசாங்கத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட MOP பசளை இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டது.

# கல்விக்காக மூன்றரை மில்லியன்களை வழங்கிய தேசபந்து செல்வராசா




(வெல்லாவெளி நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியில் பாரிய வளர்ச்சியை காண வேண்டும் எனும் நோக்கில் பாரிய முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவரும் தொழிலதிபரும் சமூக சேவையாளருமான தேசபந்து மா.செல்வராசா மூன்றரை மில்லியனுக்கும் அதிகமான தொகையினை வழங்கினார். ஞாயிற்றுக்கிழமை (22) இடம் பெற்ற இந்நிகழ்வின்போது மட்டக்களப்பில் உள்ள பாடசாலையான மெதடிஸ்த மத்திய மிஷன் உயர் தர பாடசாலையில் பொறியியல் பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்விலேயே தொழிலதிபர் தேசபந்து மா.செல்வராசா மூன்றரை மில்லியனுக்கும் அதிகமான தொகையினை 10 மாணவர்களுக்கான உதவித் தொகையாக வழங்கியுள்ளார்.

பொறியியல் பீடத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்காக நான்கு வருடத்திற்கான உதவித் தொகையாக மாதாந்தம் தலா 7000/ஶ்ரீ ரூபாய் வீதம் நான்கு வருடங்களுக்கு 3,360,000/ஶ்ரீ ரூபாயினையும், அதற்கு மேலதிக பல்கலைக்கழகம் தெரிவாகியுள்ள 14 மாணவர்களுக்கு அவர்கள் பல்கலைக்கழகம் செல்லும்போது தமக்கு தேவையான ஆடைகளை கொள்வனவு செய்வதற்காக 5000/ஶ்ரீ பொறுமதியான வவுச்சர்களையும் வழங்கி வைத்துள்ளார்.

# சம்மாந்துறை அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(எம்.சி. அன்சார்)

சம்மாந்துறை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று (24) அம்பாறை மாவட்ட கரையோராப் பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபாவின் ஒருங்கிணப்பில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிராமிய அபிவிருத்தி சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ, திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எம். மஞ்சுல ரத்னாயக்க, எம்.எஸ். உதுமாலெப்பை, எம்.ஏ. எம் தாஹீர், கே.கோடிஸ்வரன், சட்டத்தரணி எம் நிசாம் காரியப்பர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்திக அபேவிக்ரம, மாவட்ட செயலக



பிரதம பொறியியலாளர் ஏ.பி.எம் சாஹீர்,பிரதம கணக்காளர்,ஏ.எல் மஹ்ரூப்,உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம்,பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், திணைக்களங்களின் தலைவர்கள் பிரதேச செயலகத்தின்,கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இவ் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் சம்மாந்துறை பிரதச நீர்ப்பாசன பிரச்சினைகள்,சம்மாந்துறை வைத்தியசாலை காணிவிவகாரம், ஜமாலியா பாடசாலை மாற்று காணி விடயம்,மாவடிப்பள்ளியில் உடனடியாக பாலம் அமைப்பது சம்மந்தமான தீர்மானம்,விவசாய காணி சம்மந்தமான பிரச்சினைகள்,நீர்ப்பாசன பிரச்சினைகளுக்கான முறைப்பாடுகளும். தீர்வுகளும், கலந்தாலோசிக்கப்பட்டு முடிவுகளும் எடுக்கப்பட்டன என்பதோடு இன்னும் பல முடிவுகளும் எடுக்கப்பட்டன.

# வருடாந்த இடமாற்ற பட்டியல் இன்னும் இல்லை

(முகம்மட் முக்தார்)

கிழக்கு மாகாணத்தில் 2025ஆம் ஆண்டுக்கான மாகாண அரச ஊழியர்களின் வருடாந்த இடமாற்றப் பட்டியல் இன்னும் வெளியாக வில்லையென அரச ஊழியர்களால் தெரிவிக்கப்படுகிறது. முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள்,காரியாலய உதவியாளர் சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள்,தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்உள்ளிட்ட பல்வேறு சேவைகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான அரச ஊழியர்கள் வருடாந்த இடமாற்றத்தினை எதிர்பார்த்துள்ளனர். இடமாற்றப்பட்டியல் வெளியிடப்பட்டு மேன் முறையீடுகள் கோரப்பட்ட பின் தீர்மானம் அறிவிக்கப்பட்ட பின்னரே இடமாற்றங்கள் நடைமுறைப் படுத்தப்படுவது வழமையாகும். ஆயினும் இந்த நடைமுறைகளை அமுல் நடாத்துவதற்கான ஆவணங்களில் ஒப்பமிட நிருவாகத்திற்கான பிரதிப்பிரதம செயலாளர் இதுவரை நியமிக்கப்படாமை காரணமாக இடமாற்றப்பட்டியல் வெளியிடப்படுவது தாமதமடைவதாகவும் அரச ஊழியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பிரதிப்பிரதம செயலாளராக இருந்த உயர் அதிகாரி கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளராக அண்மையில் நியமனம் செய்யப்பட்டமையை அடுத்துபுதியஅதிகாரி நியமனமாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விடமாற்றப் பட்டியல் வெளியாகாமை காரணமாக சொந்த மாவட்டங்களை விட்டு வெளிமாவட்டங்களில் நீண்டகாலம் கடமையாற்றி சொந்த மாவட்டத்தை எதிர்பார்த்திருப்போரே வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

## சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு

# மருந்துவ உபகரணங்கள் வழங்கிவைப்பு



(எம்.சி. அன்சார்)

சுகாதார அமைச்சினால் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு 45 மில்லியன் ரூபாய் பெறுமதியான உள்நோக்கி குழாய் இயந்திரம் (நுனெழளஉழில ஆயஉாைநெ) மற்றும் மருந்துவ உபகரணங்கள் என்பன கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகிலா இஸ்ஸதீனினால் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் அத்தியேட்சகர், விசேட வைத்தியர்கள் உள்ளிட்டார்கள் கலந்து கொண்டனர்.

# சம்மாந்துறை, அக்கரைப்பற்று பொது நூலகத்துக்கு சிறந்த விருது



இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கள் சேவைகள் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "சமூகங்களுக்கு இடையிலே புத்தக வாசிப்பை ஊக்கப்படுத்தும்" வகையில் 2023ம் வருட தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டியதாக நாடு தழுவிய ரீதியில் உள்ளூராட்சி மன்ற நூலகங்கள் மற்றும் பாடசாலை நூலகங்களுக்குகிடையில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு வேலை திட்டத்தின் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தில் மிகச்சிறந்த முறையில் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி தெரிவு செய்யப்பட்ட சம்மாந்துறை பிரதேச சபை யூ.எல்.எம் முஹிடீன் பொது நூலகம், அக்கரைப்பற்று மாநகர சபை பொது நூலகம் இம்முறை தேசிய விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பான விருது வழங்கும் நிகழ்வு சமீபத்தில் கொழும்பில் உள்ள விளையாட்டு துறை அமைச்சின் டங்கன் வைட் கேட்போர் கூடத்தில் மத மற்றும் கலாசார அலுவலர்கள் அமைச்சர் ஹினிமடு சுனில் செனவியின் தலைமையில் நடைபெற்றது.

சம்மாந்துறை பிரதேச சபை யூ.எல்.எம். முஹிடீன் பொது நூலகத்திக்கான சிறந்த விருதை பிரதேச சபையின் செயலாளர் எம். ஏ.கே.முஹம்மட் நூலகத்துக்கு பொறுப்பான நூலகர் ஏ.கே.ஜௌபர் ஆகியோருக்கு கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் பேராசிரியர் கலாநிதி சசங்க பெரேராவினால் நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

# வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசு திசையை மாற்றுகிறது

(எம்.ஏ.அமீனுல்லா)

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத அரசாங்கம் , தற்போது அதனை வேறு திசையில் திருப்ப முயற்சிக்கின்றது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கண்டியில் தெரிவித்துள்ளார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு நேற்று முன்தினம் (23) சென்று அங்கு, வழிபட்ட பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த நாமல் ராஜபக்ஷ மேலும் கூறியதாவது:

அரசாங்கம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் தற்போது இவ்வாறானதொரு பிரச்சினையை முன்வைத்து அதனைத் திசை திருப்ப முயற்சிக்கின்றது.

கட்சியின் பலம் வாய்ந்தவர்கள் என்று கூறப்படுபவர்களின் பயோடேட்டா அறிக்கைகள் குறித்து சமூகத்தில் சில விவாதங்கள் எழுந்துள்ளன. சமூகம் கேள்வி கேட்ட பிறகு அவர்கள் இராஜினாமா செய்கிறார்கள் என்றார்.



# அரச அதிகாரிகள் மக்களின் தேவைகளை அறிந்து செயற்பட வேண்டும்

## பிரதியமைச்சர் கமகெதர திசாநாயக்க

(எம்.எஸ்.எம்.மசாஹிம்)

அரச அதிகாரிகள் தன்னலம் பாராது பொது மக்களின் தேவைகளை இனங்கண்டு செயல்படாத வரை பொது மக்களுக்கு அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் நம்பிக்கையையும் விசுவாசத்தையும் எதிர்பார்க்க முடியாதென மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புத்தசாசன சமய மற்றும் கலாசார பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க தெரிவித்தார்.

மாத்தளை பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்கு நேற்று (24) தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர் மக்களுக்கு அரச உத்தியோகத்தர்கள் அரசியல்வாதிகள் பற்றிய நம்பிக்கை முற்றிலும் இல்லாமல் போய் விட்டது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பொது மக்கள் அரசியல்வாதிகள் அரச உத்தியோகத்தர்கள் மீது நம்பிக்கை இழந்தவர்களாகவே உள்ளனர்.

இந்த நிலையை மாற்றி அமைத்திடவே எமது அரசு அரச உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தி பொது மக்களுக்கும் அரச உத்தியோத்தர்களுக்கும் மத்தியில் ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்த டிஜிட்டல் முறையை உருவாக்க எமது அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது என்றார்.

# யாழில் கடவுச்சீட்டு அலுவலகம்;

## இளங்குமரன் எம்.பி தெரிவிப்பு

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

"நாடு பொருளாதார ரீதியில் பின்னடைவை எதிர்நோக்கியுள்ள நிலையில் அதிகமானோர் வெளிநாடு செல்ல முயற்சிப்பதால் கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

உலகத்திற்கு எடுத்துக்காட்டாக இன ஐக்கியத்துடன் கூடிய புதிய கடவுச்சீட்டு ஒன்றை உருவாக்கி வெளியிட்டுள்ளோம்.

கடவுச்சீட்டை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். வெகுவிரைவில் யாழ்ப்பாணத்தில் கடவுச்சீட்டு மற்றும் அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு செல்வதற்கு அதிக பணம் செலவழிப்பதுடன் சில முகவர்களால் ஏமாற்றப்படுகின்றனர்" என தெரிவித்தார்.

# கெசல்கமுவ ஓயாவை அளவீடு செய்ய முற்பட்டோர் விரட்டியடிப்பு

(பொகவந்தலாவ எஸ் சதீஸ்)



காலசீர் நீர் தேக்கத்திற்கு நீர் வழங்கும் பொகவந்தலாவ டியன்சின் பகுதியில் உள்ள கெசல்கமுவ ஓயாவை அனுமதியின்றி அளவீடு செய்ய வந்த குழுவினர் தோட்ட நிராவாகத்தினால் விரட்டியடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

நோர்வூட் பிரதேச சபை மற்றும் தெரேசியா தோட்ட நிர்வாகம் ஆகியோரிடம் எவ்வித அனுமதி பெறாது சட்ட விரோதமாக மாணிக்கக் கல் அகழ்வினை மேற்கொள்ள கெசல்கமுவ ஓயாவினை அளவீடு செய்யும் பணியை மேற்கொண்ட குழுவினரே விரட்டியடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை 27.09.2023ம் ஆண்டு பொகவந்தலாவ டியன்சின் தொடக்கம் கிலானி வரை கெசல்கமுவ ஓயா சுத்தம் செய்யும் பணிக்காக முன்னாள் நீர்வளங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் ஊடாக 14மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்ட போதும் குறித்த பகுதியில் மாணிக்கக்கல் அகழ்வினை மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட போதிலும் குறித்த திட்டம் இடை நடுவில் இடைநிறுத்தப்பட்டது.

இருந்த போதிலும் குறித்த ஆற்றில் மாணிக்கக்கல் படிவங்களை அகழ்வதற்கு தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகார சபையும் அனுமதியினை வழங்கி இடை நடுவில் அதற்கான அனுமதியினை நிறுத்தியது.

நாட்டில் தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதும் நோர்வூட் பிரதேச சபையின் ஊடாக கேசல்கமுவ ஓயாவில் முன்னெடுக்கப்பட்ட திட்டத்தின் முதற்கட்டம் நிறைவடைந்துள்ளதாகவும் மாணிக்கக்கல் அகழ்வதற்கு கால அவகாசம் போதுமானது இல்லையெனவும் தெரிவித்தனர்.

அதனால் அகழ்வு செய்யப்பட்ட மண்ணை முறையாக நிறப்பும் பணி இன்னும் நிறைவடையவில்லை அந்த மண்ணை கழுவி முடித்து அது தொடர்பான வேலைத்திட்டத்தை நிறைவு செய்யும் கோரிக்கையை முன்னெடுப்பதற்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு நோர்வூட் பிரதேச சபையின் செயலாளர் கே. முரளிதரன் 09.10.2024அன்று கடிதம் ஒன்றை சுற்றறிக்கை அதிகார சபை-தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகார சபை - தோட்ட முகாமைத்துவ கண்காணிப்பு பிரிவு - சுரங்க பணியகம்- சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு கடிதத்தின் பிரதிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனவே ஆற்றினை சுத்தப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் மற்றும் மாணிக்கக்கல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் குறித்த பகுதியில் இருந்து உடனே அகற்றுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சண்டிலிப்பாய் விபத்தில் கணவன்- மனைவி படுகாயம்

(பு.கஜிந்தன்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சண்டிலிப்பாய் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் கணவனும் மனைவியும் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

அராலி பகுதியைச் சேர்ந்த கணவன், மனைவி இருவரும் குறித்த சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவ்வீதியால் வந்த இன்னொரு மோட்டார் சைக்கிள் அவர்கள் மீது மோதியுள்ளது. இதன்போது இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மற்றைய மோட்டார் சைக்கிளின் சாரதி மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நோர்வூட் சென்ஜோன்டிலரி தோட்டத்தில்

# சிறுத்தை குட்டிகள் மீட்பு



நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நோர்வூட் சென்ஜோன்டிலரி மேற்பிரிவு தோட்ட தேயிலை மலையில் இருந்து இரண்டு சிறுத்தை குட்டிகள் நேற்று (24) காலை மீட்கப்பட்டதாக நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேயிலை மலையில் ஆண் தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருந்த போது இரண்டு குட்டிகள் இருப்பதை கண்டு தோட்ட நிர்வாகத்திற்கு அறிவித்துள்ளனர். இந்த இரண்டு குட்டிகள் தொடர்பாக நோர்வூட் பொலிஸார் வனவிலங்கு அதிகாரிகளுக்கு அறிவித்ததை தொடர்ந்து இந்த இரு குட்டிகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்த இரு குட்டிகளையும் தாய் சிறுத்தை திங்கட்கிழமை (23) ஈன்றெடுத்திருக்கலாம் என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவித்ததோடு மீட்ட இரண்டு சிறுத்தை குட்டிகளையும் அதே இடத்தில் வைக்குமாறு வனவிலங்கு அதிகாரிகள் குறித்த தேயிலை மலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அறிவித்ததாக தொழிலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இரு குட்டிகளும் கண்டுபிடிக்கப்பட்ட பகுதியில் பெரிய சிறுத்தை ஒன்று அலைந்து திரிவதாகவும் அந்த பகுதிக்கு சென்று தொழில் புரிய முடியாத சூழல் காணப்படுவதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பாக நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சென்ஜோன் டிலரி மேற்பிரிவு தோட்ட தொழிலாளர்கள் கோரிக்கை விடுகின்றனர்.

# சட்ட விரோத மாணிக்கக்கல் அகழ்வு

## மூவர் கைது

காசல்ரீ நீர் தேக்கத்திற்கு நீர் வழங்கும் நோர்வூட் கெசல்கமுவ ஓயாவில் சட்ட விரோதமாக மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் நேற்று (24) கைது செய்யப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.



நோர்வூட் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்போது மாணிக்கக் கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட நீர் இறைக்கும் மோட்டார் மற்றும் ஏனைய உபகரணங்களையும் மீட்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவர் கம்பளை பொகவந்தலாவ. எம்பிலிபிட்டிய ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்கள் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# நுவரெலியாவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள்





(டி.சந்ரு செ.திவாகரன்)

நுவரெலியா மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கு, மண்சரிவு போன்ற அனர்த்தங்கள் காரணமாக மக்கள் இடைத்தங்கல் முகாம்களிலேயே தங்கியுள்ளனர்.

18 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட 200 குடும்பங்களுக்கு பிரித்தானியாவில் இயங்கி வரும் மலையக மக்கள் ஒன்றியத்தின் நிதியுதவியில் தசிவசங்கர் தலைமையிலும் , பிரித்தானியாவில் வாழும் புலம்பெயர் சமூகத்தின் மிகவும் முக்கியமான அமைப்பாக இருக்கின்ற OUR SOCIETY UK வின் நிதியுதவியிலும் நேற்று முன்தினம் (23) உலர் உணவுகள் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த உலர் உணவுப் பொருட்களை நுவரெலியா மாநகர சபையின் சுகாதார பரிசோதகரினால் பரிசோதிக்கப்பட்டு நுவரெலியா பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளரின் மேற்பார்வையின் கீழ் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாகப் பிரித்தானிய மலையக மக்கள் ஒன்றியமானது பிரித்தானியாவில் பதியப்பட்ட மற்றும் இலங்கையின் மலையக மக்களின் கல்வி வளர்ச்சி உட்பட ஏனைய சேவைகளையும் தொடர்ந்து வழங்கி வருகின்ற ஓர் அமைப்பாக விளங்குகின்றது.

# யாழ்ப்பாணத்தில் வர்த்தகர் உயிர்மாய்ப்பு

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணத்தில் புகைப்பட நிறுவனம் ஒன்று நஷ்டமடைந்தமையால் அதன் உரிமையாளர் நேற்றையதினம் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். இதன்போது கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த புலவர் ரமேஷ்குமார் (வயது 43) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் நேற்று முன்தினம் மரணச் சடங்கு ஒன்றிற்கு சென்றுவிட்டு இரவு 10.30 மணிக்கு வீடு வந்துள்ளார். வீடு வந்தவர் மேல் மாடிக்கு சென்றுள்ளார். இந்நிலையில் அவரது மனைவி இரவு 11 மணியளவில் உணவு கொண்டு சென்றவேளை அவர் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார்.

பின்னர் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.





நத்தார் பண்டிகையை முன்னிட்டு மக்கள் வவுனியாவில் புத்தாடைகள் மற்றும் பட்டாசுகள், கிறிஸ்மஸ் மரங்களையும் கொள்வனவு செல்வதைக்காணலாம்.

(படங்கள் : கி.வசந்தன்)




# ஹிமாச்சல பனிப்பொழிவில் சிக்கிய 1000 வாகனங்கள்



ஹிமாச்சலப் பிரதேசத்தின் மணாலியில் பனிப்பொழிவு காரணமாக திங்கட்கிழமை (23) பல வாகனங்கள் சிக்கிக்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அடர்ந்த பனிப்பொழிவு காரணமாக ரோஹ்தாங்கின் சோலாங் மற்றும் அடல் சுரங்கப் பாதையில் சுற்றுலாப் பயணிகளும், உள்ளூர்ப் பயணிகளும் பல மணிநேரம் தங்களின் வாகனத்தில் சிக்கித் தவித்தனர். அதிகாரிகளின் கூற்றுப்படி, சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் நீண்ட போக்குவரத்து நெரிசலில் சிக்கிக்கொண்டன, மீட்பு நடவடிக்கையை ஆரம்பிக்கவும், சுமார் 700 சுற்றுலாப் பயணிகளை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றவும் பொலிஸார் விரைவான நடவடிக்கையை எடுத்திருந்தனர். உள்ளூர் அதிகாரிகளும் மீட்புப் பணிகளை ஒருங்கிணைத்தனர். இருப்பினும், பனிப்பொழிவு மாநிலத்தின் மற்ற பகுதிகளை குளிர்கால அதிசய நிலங்களாக மாற்றியது.

ஹிமாச்சலின் பனி படர்ந்த மலைப்பகுதியில் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டை கொண்டாட சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது. பனிப்பொழிவு அழகின் காணொளிகள் சமூக வலைதளங்களில் பரவி மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இதனிடையே, வியாழன் வரை நடுத்தர, உயரமான மலைப்பகுதிகளில் ஒரு சில இடங்களில் லேசான மழை மற்றும் பனிப்பொழிவு இருக்கும் என இந்திய வானிலை ஆய்வு நிலையம் கணித்துள்ளது.

# இந்திய மீனவர்களை விடுவியுங்கள்

## தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் ஜெய்சங்கருக்கு கடிதம்



இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 17 மீனவர்கள் இரண்டு மீன்பிடிப் படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 17 மீனவர்கள் இரண்டு இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் நேற்று சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாத ஆறு நபர்களால், நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை கிராமத்தைச் சேர்ந்த தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இந்த தாக்குதலில், இரண்டு நாட்டுப் படகுகளில் பயணித்த ஆறு மீனவர்களில், மூன்று மீனவர்கள் காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலின்போது, மீனவர்களது மீன்பிடிப் படகுகளில் இருந்த GPS கருவிகள், VHF கருவிகள், மீன்பிடி வலை, கையடக்கத் தொலைபேசி மற்றும் அவர்கள் பிடித்த மீன்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இதுபோன்று அடிக்கடி நடக்கும் கைது மற்றும் தாக்குதல் சம்பவங்கள், பாரம்பரிய கடற்பரப்பில் மீன்பிடிக்கும் தொழிலை மட்டுமே நம்பியிருக்கும் மீனவர்களின் வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மையையும், ஆபத்தை ஏற்படுத்துகிறது.

2024ஆம் ஆண்டில் மட்டும் 530 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, 71 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், அண்மைக்காலமாக நடைபெற்று வரும் இத்தகைய சம்பவங்களும், தாக்குதல்களும் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழும் மீனவ மக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், எதிர்காலத்தில் தமிழக மீனவர்கள் மீது இதுபோன்ற தாக்குதல்கள் நடைபெறாமல் இருக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என முதலமைச்சர் தெரி வித்துள்ளார்.

# சண்டிகர் மாநகராட்சி உறுப்பினர்கள் கைகலப்பு



சண்டிகர் மாநகராட்சி உறுப்பினர்களிடையே வாக்குவாதம் முற்றியதைத் தொடர்ந்து கைகலப்பில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. ராஜ்யசபாவில், மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று நடந்த சண்டிகர் மாநகராட்சி கூட்டத்தில் காங்கிரஸ், ஆம் ஆத்மி உறுப்பினர்கள் தீர்மானம் கொண்டு வந்தனர். அதில், அமித்ஷா பதவி விலக வேண்டும் எனக் கூறப்பட்டு இருந்தது. இதற்கு, எதிர்ப்பு தெரிவித்த பா.ஜ.க உறுப்பினர்கள், நேரு ஆட்சியில் அம்பேத்கர் இழிவுபடுத்தப்பட்டதாக குற்றம் சாட்டினர். இதனால், இரு தரப்புக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இது முற்றி, கடைசியில் கைக்கலப்பில் ஈடுபட்டனர். சுமார் 20 நிமிடங்கள் இப்போராட்டம் நீடித்தது. அப்போது, மாநகராட்சியில் இருந்த நியமன உறுப்பினரான அனில் மசியாவை, வாக்கு திருடன் என காங்கிரஸ் மற்றும் ஆம் ஆத்மி உறுப்பினர்கள் குற்றம்சாட்ட, அதற்கு, ராகுல் ஜாமினில் வெளியே வந்தவர் என அவர் பதிலடி கொடுத்தார். இதுவும் மோதலை மேலும் தூண்டிவிட்டது. இதனையடுத்து ஏனைய உறுப்பினர்கள் மற்றும் பாதுகாவலர்கள் அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# கோவையில் புதிய மெட்ரோ ரயில் திட்டம்




கோவையில் இந்திய ரூபாய் 10,740 கோடியிலும், மதுரையில் இந்திய ரூபாய் 11.340 கோடி செலவிலும் மெட்ரோ ரயில் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணி, பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கும் என சென்னை மெட்ரோ நிறுவன மேலாண்மை இயக்குனர் சித்திக் தகவல் தெரிவித்துள்ளார்.

கோவை மாநகராட்சியில் 32 ஸ்டேஷன் 2 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தை உருவாக்கி, மாநில அரசு மூலம் மத்திய அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளோம். சமீபத்தில் மத்திய அரசு கூடுதல் விவரங்களை கேட்டது. அந்த விவரங்களும் மாநில அரசு மூலம் மத்திய அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு ஒப்புதல்களை எதிர்பார்த்து காத்திருக்கிறோம். கோவையில் ரூ.10,740 கோடியிலும், மதுரையில் ரூ.11.340 கோடி செலவிலும் மெட்ரோ ரயில் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என ஊடகவியலாளர்களுக்கு சித்திக் தெரிவித்தார்.

மெட்ரோ திட்டத்தின் ஆரம்ப கட்ட பணிகள் வரும் ஜனவரி அல்லது பெப்ரவரி மாதம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் மெட்ரோ பணிமனை அமைப்பதற்கு 16 ஏக்கர் நிலம் தேவை. வழித்தடம் அமைப்பதற்கு 10 ஹெக்டேயர் நிலம் தேவைப்படும். பணிமனை, சக்தி பொறியியல் கல்லூரி அருகே அமைக்கப்படும். சிறிய பணிமனை ஒன்று, வழியம்பாளையம் பிரிவில் அமையும். மொத்த திட்டமும் அனுமதி கிடைத்த நாள் முதல் 3 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும். மத்திய அரசின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறோம். கோவை மெட்ரோ ரயிலில் 3 பெட்டிகளில் 700 பேர் பயணிக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. கோவை, மதுரை மெட்ரோ திட்டம் ஒருங்கிணைந்த திட்டமாக செயல்படுத்தப்பட உள்ளது. திட்டத்துக்கு நிலம் கையகப்படுத்தும் பணி பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கும் எனவும் தெரிவித்தார்.

மெட்ரோ ரயில் திட்ட பணிகள் என்பது 10 அல்லது 20 ஆண்டுகளாக மேற்கொள்வது அல்ல. 150 ஆண்டுகளுக்கான கட்டமைப்பு ஆகும். கோவையில் 2 வழித்தடங்களில் மெட்ரோ அமைக்க 16 ஹெக்டேயர் நிலம் தேவை. இந்த திட்டத்தால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும். அவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

மெட்ரோ பாதையில், 30 மீட்டர் இடைவெளியில் ஒரு தூண் கட்டப்படும். கோவையில் அவினாசி வீதிக்கு மேம்பாலம் அமைக்கும் அறிவிப்பை மனதில் வைத்து திட்டமிடுவோம். மதுரை திருமங்கலம் முதல் ஒத்தக்கடை வரை 32 கிலோ மீட்டர் வரை மெட்ரோ ரயில் வழித்தடம் அமைகிறது என அவர் தெரிவித்தார்.

# ஜல்லிக்கட்டுப் போட்டி

## தமிழக அரசின் வழிகாட்டல் நெறிமுறைகள் வெளியீடு




தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டத்தில் அலங்கா நல்லூர், பாலமேடு, அவனியாபுரத்திற்கு அடுத்தபடியாக உசிலம்பட்டி அருகே உள்ள தொட்டப்பநாயக்கனூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு பிரசித்தி பெற்றது. இந்நிலையில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. மாவட்ட அதிகாரியிடம் அனுமதி பெறாத அமைப்பாளர்களுக்கு ஜல்லிக்கட்டு போட்டி நடத்த அனுமதி வழங்கக்கூடாது, ஜல்லிக்கட்டின்போது காளைகளை துன்புறுத்துவதை தவிர்க்க வேண்டும், ஜல்லிக்கட்டு போட்டி நடத்த விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்,ஜல்லிக்கட்டு போட்டி முழுவதும் வீடியோ பதிவு செய்ய வேண்டும் என ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடாத்துவதற்கான வழிகாட்டல் நெறிமுறைகள் அனைத்து மாவட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# ராஜஸ்தான் லொறி விபத்து; பலி எண்ணிக்கை 15 ஆக உயர்வு

ராஜஸ்தானில் எரிவாயுவினைக் காவிச்சென்ற லொறி விபத்துக்குள்ளான சம்பவத்தில் பலி எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் கடந்த 20ம் திகதி கோர விபத்து ஏற்பட்டது. ஜெய்ப்பூர் – அஜ்மீர் நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த எரிவாயுவினைக் காவிச்சென்ற லொறி வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு லொறி மீது மோதியது. இந்த கோர விபத்தில் எரிவாயுதாங்கி வெடித்ததில் ஏற்கனவே 14 பேர் உயிரிழந்தனர். மேலும், படுகாயங்களுடன் பலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்நிலையில், பலி எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது. வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் நேற்று காலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

# பாரம்பரிய நகரங்களின் பட்டியலில் புதுச்சேரி



புதுச்சேரியை யுனெஸ்கோ பாரம்பரிய நகர பட்டியலில் இடம் பெற செய்யும் முயற்சியாக 114 பாரம்பரிய கட்டிடங்கள் அடையாளம் காணப்பட்டு கடந்த 2022ம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதில் விடுபட்ட 131 பாரம்பரிய கட்டிடங்கள் 2ஆம் கட்ட பட்டியலில் இணைத்து கடந்த ஓகஸ்ட் மாதம் வெளியிடப்பட்டது. இந்த பட்டியலில் பழமையான கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள், தனியார் கட்டிடங்களும் இடம் பெற்றன. இந்த 2 பட்டியலிலும் சேர்த்து இதுவரை 245 பாரம்பரிய கட்டிடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்கிடையில் புதுச்சேரி புல்வார்டு பகுதியில் பிரெஞ்சு கட்டிடங்களுக்கு மத்தியில் உள்ள தமிழர் பாரம்பரிய கட்டிடங்களும் தற்போது கணக்கெடுக்கப்பட்டுள்ளன. இதில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த 18 கட்டிடங்கள் முதல் கட்டமாக அடையாளம் காணப்பட்டு புதுச்சேரி அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளன. விரைவில் 3ஆவது பாரம்பரிய கட்டிடங்கள் பட்டியலும் வெளியாக உள்ளது. புதுச்சேரியில் புல்வார்டு பகுதி மட்டுமின்றி அதனையொட்டிய பகுதிகளுக்கு அப்பாலும் பல்வேறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஏராளமான கட்டிடங்கள் உள்ளன. குறிப்பாக ஏ.எப்.டி., சுதேசி, பாரதி பஞ்சாலைகள் உள்ளன. இதுமட்டுமின்றி வில்லியனூர் திருக்காமீசுவரர் கோவில், வில்லியனூர் லூர்து மாதா ஆலயம் உட்பட பல்வேறு வழிபாட்டு தலங்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. எனவே இந்த கட்டிடங்களை இன்டாக், நகர அமைப்பு குழுமங்கள் இணைந்து கணக்கெடுக்க உள்ளன. இதன் மூலம் பாரம்பரிய நகரங்களின் பட்டியலில் புதுச்சேரி இடம் பெறவுள்ளது.




# ஹமாஸ் தலைவரின் கொலை; பொறுப்பை ஏற்றது இஸ்ரேல்

ஜூலை மாதம் தெஹ்ரானில் ஹமாஸின் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியேவை (Ismail Haniyeh) இஸ்ரேல் கொன்றதை இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் முதன்முறையாக ஒப்புக்கொண்டுள்ளார்.

ஹனியே ஈரான் தலைநகரில் தங்கியிருந்த கட்டிடத்தில் இஸ்ரேல் மீது பரவலாக நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். இஸ்ரேல் மீது ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்களை ஏவி வரும் யேமனில் ஈரான் ஆதரவு பெற்ற ஹவுத்தி இயக்கத்தின் தலைவர்களை குறிவைப்பதாகவும் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் கட்ஸ் (Israel Katz) தனது உரையில் தெரிவித்தார். தனித்தனியாக, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, ஹமாஸுடன் காஸாவில் போர்நிறுத்தத்தை ஒப்புக்கொள்வதில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், ஆனால் எப்போது ஒரு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும் என்பதற்கான காலக்கெடுவை அவரால் வழங்க முடியாது என்றும் கூறினார்.



ஹமாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான பேச் சுவார்த்தை 90 சதவீதம் நிறைவடைந்துள்ளதாகவும், ஆனால் முக்கிய பிரச்சினைகளில் இன்னும் தீர்மானம் எட்டப்படவில்லை என பலஸ்தீனிய மூத்த அதிகாரி ஒருவரின் கருத்துக்கு மத்தியில் இந்த அறிக்கை வெளிவந்துள்ளது. 62 வயதான ஹனியே, ஹமாஸின் ஒட்டுமொத்தத் தலைவராக பரவலாகக் கருதப்பட்டார்,

காஸா பகுதியில் போர் நிறுத்தத்தை எட்டுவதற்கான பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கு வகித்தார். அவரது படுகொலைக்குப் பின்னர், ஹமாஸ் காஸாவில் அதன் தலைவரும், 2023 அக்டோபர் 7 தாக்குதலின் தலைமை வடிவமைப்பாளர்களில் ஒருவருமான யாஹ்யா சின்வாரை குழுவின் ஒட்டுமொத்தத் தலைவராக நியமித்தது. எனினும், ஒக்டோபரில் காஸாவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் சின்வார் இஸ்ரேலிய இராணுவத்தால் கொல்லப்பட்டார், மேலும் குழு இன்னும் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதற்கிடையில், ஹசன் நஸ்ரல்லா ஈரான் ஆதரவு பெற்ற லெபனான் குழுவான ஹிஸ்புல்லா தலைவராக இருந்தார் - இஸ்ரேலின் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான வியத்தகு இராணுவ நடவடிக்கையால் அவர் செப்டம்பர் மாதம் பெய்ரூட்டில் படுகொலை செய்யப்பட்டார்.

# அவுஸ்திரேலியாவில் காட்டுத்தீ ; இரண்டு மணிநேர அவகாசம்

அவுஸ்திரேலியாவில் காட்டுத்தீயால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிப்பவர்கள் கிறிஸ்மஸுக்கு முன்பு வீடு திரும்பவும் தங்கள் பொருட்களை சேகரிக்கவும் செவ்வாய்க்கிழமை (24) இரண்டு மணி நேர அவகாசம் வழங்கப்பட்டது.

கிறிஸ்மஸ் நாள் அன்று காலை 10 மணி முதல் நண்பகல் வரை விக்டோரியாவின் கிராம்பியன்ஸ் வீதி மற்றும் அரரத்-ஹால்ஸ் கேப் வீதி இடையேயான சந்திப்பில் பொலிஸ் வீதித் தடை திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், அதிகரித்து வரும் காட்டுத் தீயை கட்டுப்படுத்த அவசரகால பணியாளர்கள் அயராது உழைத்து வருகின்றனர். அவுஸ்திரேலியாவில் காட்டுத் தீயினால் ஏற்கனவே கடந்த வாரத்தில் 41,000 ஹெக்டேர் (101,000 ஏக்கர்) நிலங்கள் எரிந்து நாசமாகியுள்ளன. இருப்பினும் உயிரிழப்பு அல்லது சொத்து இழப்பு எதுவும் ஏற்படவில்லை.

புதன்கிழமை, கிறிஸ்மஸ் தினத்தன்று விக்டோரியா மாநிலம் முழுவதும் வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸுக்கும், வியாழன் அன்று 40 டிகிரி செல்சியஸுக்கும் அதிகமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அதேநேரத்தில் தெற்கு அவுஸ்திரேலியா மற்றும் நியூ சவுத் வேல்ஸின் சில பகுதிகளும் வியாழன் முதல் வெள்ளி வரை காட்டுத்தீயை எதிர்கொள்ளக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கானவர்களைக்



கொன்று 24 மில்லியன் ஹெக்டேர் நிலத்தை அழித்த 2019-2020 பேரழிவுத் தீக்குப் பின்னர் அவுஸ்திரேலியா காட்டுத் தீ தொடர்பில் அதிக எச்சரிக்கையுடன் உள்ளது. அவுஸ்திரேலியா வெள்ளம், கடுமையான வெப்பம் உட்பட தீவிரமான பேரழிவுகளை அடிக்கடி சந்தித்து வருகிறமையும் குறிப்பிடத்தக்கது.

# ஷேக் ஹசீனாவை திருப்பி அனுப்புங்கள்; பங்களாதேஷ் வேண்டுகோள்

பங்களாதேஷ் இடைக்கால அரசு, வழக்குகளை சந்திக்க ஷேக் ஹசீனாவை பங்களாதேஷிற்கு திருப்பி அனுப்புமாறு இந்தியாவிற்கு செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

பங்களாதேஷில் ஷேக் ஹசீனா 16 ஆண்டுகளாக பிரதமராக இருந்தார். அவரது அரசுக்கு எதிராக மாணவர்கள் போராட்டம் நடந்து வந்தது. கடந்த ஓகஸ்ட் 5ஆம் திகதி, மாணவர்கள் போராட்டம் தீவிரம் அடைந்தது. இதனால் ஷேக் ஹசீனா பங்களாதேஷினை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்தார். அவரது அரசு கவிழ்க்கப்பட்டது. வேறு நாட்டில் அரசியல் புகலிடம் கிடைக்காததால், ஷேக் ஹசீனா 4 மாதங்களுக்கு மேலாக இந்தியாவில் தங்கி இருக்கிறார். அதே சமயத்தில், முகமது யூனுஸ் தலைமையில் பங்களாதேஷில் இடைக்கால அரசு பதவியேற்றது. ஷேக் ஹசீனா, அவருடைய அமைச்சர்கள், ஆலோசகர்கள், இராணுவ மற்றும் சிவில் அதிகாரிகள் ஆகியோருக்கு எதிராக



பல்வேறு குற்றவியல் வழக்குகளும், இனப்படுகொலை குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டது. இந்த வழக்குகளில் ஷேக் ஹசீனா உள்ளிட்டோருக்கு எதிராக டாக்காவில் உள்ள சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் கைது உத்தரவை பிறப்பித்துள்ளது.

இதற்கிடையே, வழக்குகளை சந்திக்க ஷேக் ஹசீனாவை இந்தியாவில் இருந்து வரவழைக்க ஏற்பாடு செய்யுமாறு பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சகத்துக்கு பங்களாதேஷ் உள்துறை அமைச்சகம் கடிதம் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா AI பிரிவின் ஆலோசகராக தமிழர் நியமனம்

அமெரிக்காவின் ஏ.ஐ. (AI) பிரிவின் ஆலோசகராக இந்திய அமெரிக்கரான ஸ்ரீராம் கிருஷ்ணன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற ட்ரம்ப், தனது அரசில் பணியாற்றுபவர்களை தேர்வு செய்யும் பணியில் முழு கவனம் செலுத்தி வருகிறார். அதன்படி, சென்னையை சேர்ந்த ஸ்ரீராம் கிருஷ்ணனை, வெள்ளை மாளிகையின் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) தொடர்பான அறிவியல் தொழில்நுட்ப முதுநிலை ஆலோசகராக ட்ரம்ப் நியமனம் செய்துள்ளார். தொழிலதிபர்கள் எலான் மஸ்க் உள்ளிட்ட பலருக்கு தங்களின் அரசின் முக்கிய பொறுப்புகளை ட்ரம்ப் வழங்கியுள்ளார்.

அதேபோல, விவேக் ராமசாமி உள்ளிட்ட இந்திய வம்சாவளியினரும் டிரம்ப்பின் அரசு நிர்வாகத்தில் இடம்பிடித்துள்ளனர். மைக்ரோசாப்ட்,



டுவிட்டர், யாகூ, பேஸ்புக் நிறுவனங்களிலும் ஸ்ரீராம் கிருஷ்ணன் பணியாற்றியுள்ளார்.

தமிழரான இவர் சென்னை காட்டாங்குளத்தூரில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் பட்டப்படிப்பினை மேற்கொண்டுள்ளார். பிரபல தொழிலதிபரான டேவிட் சேக்சுடன் பணியாற்றிய ஸ்ரீராம் கிருஷ்ணன், ஏ.ஐ இற்கான அமெரிக்க தலைமை பொறுப்பை கவனிக்க இருக்கிறார். அரசின் ஏ.ஐ கொள்கையினை வடிவமைக்க இருக்கும் இவர், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஜனாதிபதியின் ஆலோசனைக் குழுவிலும் இடம்பெற்றுள்ளார் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இந்திய அமெரிக்கரான ஸ்ரீராம் கிருஷ்ணன் சென்னையில் பிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன் வைத்தியசாலையில் அனுமதி

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் (Bill Clinton) திங்கட்கிழமை (23) பிற்பகல் வொஷிங்டன், டி.சி.யிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காய்ச்சல் ஏற்பட்டதையடுத்து அவர், சிகிச்சை மற்றும் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக அவரது செய்தித் தொடர்பாளர் சிஎன்என் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார். இது குறித்து குறிப்பிட்டுள்ள கிளின்டனின் துணைத் தலைவர் ஏஞ்சல் யுரேனா, முன்னாள் ஜனாதிபதி நலமாக உள்ளார். அவர் எதிர்வரும் கிறிஸ்துமஸ் தினத்துக்கு முன்னர் வீடு திரும்புவார் என்று நாங்கள் நம்புகின்றோம். அவர் நல்ல மனநிலையில் இருக்கிறார் என்றார்.

78 வயதான கிளின்டன், மெட்ஸ்டார் ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழக வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்படுவதற்கு முன்னர் வொஷிங்டனில் உள்ள அவரது வீட்டில் இருந்தார். அவர் குறைந்தபட்சம் ஒரு இரவுக்குள் வைத்தியசாலையில் இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிறிஸ்மஸுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட செய்தி நாடு முழுவதும் வேகமாக பரவியது. ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்கு முன்பு வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறியதிலிருந்து, 42 ஆவது அமெரிக்க ஜனாதிபதி, பல உடல்நலப் பிரச்சினைகளை எதிர்கொண்டார். அவர் 2004 இல் நியூயோர்க்கில் பைபாஸ் இதய அறுவை சிகிச்சை செய்தார், அடுத்த ஆண்டு நுரையீரல் பாதிப்பினை எதிர்கொண்டார். 2010 இல் அவருக்கு



மற்றொரு இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. சிறுநீரக நோய்த்தொற்று அவரது இரத்த ஓட்டத்தில் பரவியதால் 2021 இல் லொஸ் ஏஞ்சல்ஸில் ஆறு நாட்கள் வைத்தியசாலையில் கிளிண்டன் அனுமதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# துருக்கியில் வெடிவிபத்து; 12 பேர் பலி

வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். துருக்கி நாட்டின் பிலிகிசர் மாகாணம் கரிசி நகரில் இராணுவ ஆயுதங்களுக்கு தேவையான வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. இந்த தொழிற்சாலையில் 50 இற்கும்



மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இந்நிலையில், இந்த வெடிமருந்து தொழிற்சாலையில் நேற்று பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த வெடிவிபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க மருத்துவக் காப்பீட்டு நிறுவன அதிகாரி கொலை வழக்கில் திருப்பம்

அமெரிக்க மருத்துவக் காப்பீட்டு நிறுவன அதிகாரி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட மான்ஜியோன், தான் அந்த கொலையை செய்யவில்லை என நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் மருத்துவத்துறை சார்ந்த முன்னணி நிறுவனம் யுனைடட் ஹெல்த்கேர். இந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பிரையன் தாம்சன் (50 வயது) கடந்த டிசம்பர் 4 ஆம் திகதி ஹோட்டல் வாசலில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த கொலை தொடர்பாக கடந்த டிசம்பர் 10 ஆம் திகதி பென்சில்வேனியாவில் மெக்டோனால்ஸ் கடையில் வைத்து 26 வயதான பொறியியல் பட்டதாரி லூய் கி மான்ஜியோன் என்ற இளைஞரை புலனாய்வு பொலிஸ் அதிகாரிகள் குழு கைது செய்தது. வீட்டிலேயே 3டி பிரிண்டர் மூலம் துப்பாக்கியை செய்து அதன்மூலம் இந்த கொலையை அவர் செய்ததாக பொலிஸ் தெரிவித்தது. ஆயுள் காப்புறுதி சார்ந்த யுனைடட் ஹெல்த்கேர் உள்ளிட்ட நிறுவனங்களின் அணுகுமுறை மக்களின் உயிரை பணமாக பார்ப்பதாக வெகு மக்களிடையே கோபம் இருந்து வந்த நிலையில் இந்த கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட மான்ஜியோனுக்கு ஆதரவாக பலர் குரல் கொடுத்து வருகின்றனர். இந்நிலையில்தான் அந்த கொலையை செய்யவில்லை என்று மாஞ்சியோன் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கொலை மற்றும் பயங்கரவாத செயற்பாடுகள் உள்ளிட்ட 11 பிரிவுகளின் கீழ் மாஞ்சியோன் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. மான்ஹாட்டனில் உள்ள நியூயோர்க் மாகாண குற்றவியல் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை மாஞ்சியோன் ஆஜர்படுத்தப்பட்டார். மான்ஜியோனுக்கு ஆதரவாக வாதாட பெண் வழக்கறிஞர் கேரன் ஆக்னிபிலோ ஆஜரானார். தனது கட்சிக்காரரை மனித பிங்பாங் பந்துபோல் அதிகாரிகள் நடத்துவதாகத் தெரிவித்தார். தொடர்ந்து பேசிய மாஞ்சியோன் தான் குற்றம் செய்யவில்லை (Not Guilty) என்று தெரிவித்தார். இதனையடுத்து வழக்கு விசாரணை 2025, பிப்ரவரி 21 ஆம் திகதிக்கு தள்ளி வைக்கப்பட்டது. பொதுமக்கள் மத்தியில் கவனம் பெற்றுவரும் இந்த வழக்கில் மாஞ்சியோன்





குற்றத்தை ஒப்புக்கொள்ளாதது முக்கியமானதாகப் பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

Sports விளையாட்டு
oruvansports@gmail.com

## மகளிர் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணம்

# இலங்கை நேரடி தகுதி



இந்தியாவில் 2025 நடைபெறவுள்ள மகளிர் ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத்துக்கு இலங்கை நேரடியாகத் தகுதி பெற்றுள்ளது.

வெலிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐசிசி மகளிர் சம்பியன்ஷிப் தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் சுற்றுலா அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக நியூசிலாந்து அணி தோல்வியடைந்து தொடரை 2-0 என இழந்தது. இதன் மூலம் இந்த போட்டித் தொடரின் முடிவில் 21 போனஸ் புள்ளிகளுடன் நியூசிலாந்து 6ஆவது இடத்தில் உள்ளது.

இலங்கை தற்போது 22 புள்ளிகளுடன் 5வது இடத்தில் உள்ளது, மேலும் 10 அணிகள் பங்கேற்கும் இந்த சம்பியன்ஷிப்பில் 5 முன்னணி அணிகளுடன் போட்டியை நடத்தும் இந்தியாவும் (27) நேரடியாக உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெறும். அவுஸ்திரேலியா (39), இங்கிலாந்து (32), தென்னாப்பிரிக்கா (25) ஆகிய அணிகளும் உலகக் கிண்ணத்தில் இடம்பிடித்துள்ளன.

இந்த சம்பியன்ஷிப்பில் மீதமுள்ள போட்டிகளில் பங்களாதேஷ் (19) அல்லது மேற்கிந்திய தீவுகள் (14) மட்டுமே இலங்கையை மிஞ்ச முடியும். எவ்வாறாயினும், இலங்கை 6வது இடத்திற்குக் கீழே விழாததால் நேரடியாக தகுதி பெற்றுள்ளது. பங்களாதேஷ் அணிக்கு மேற்கிந்திய தீவுகளுக்கு எதிராக 3 போட்டிகளும், மேற்கிந்திய தீவுகள் அணிக்கு பங்காளதேசத்திற்கு எதிராக ஒரு போட்டி மீதமுள்ளன. தற்போது பாகிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகள் தகுதிச் சுற்றுப் போட்டியில் விளையாட உள்ளதால், இந்த 10 அணிகளுடன் மேலும் 2 அணிகள் இணையும்.

ஜுன் 2022 இல் தொடங்கிய இந்த சம்பியன் ஷிப்பின் கீழ் ஒரு அணி 24 போட்டிகளில் விளையாட வேண்டும், மேலும் கடந்த ஆகஸ்டில் அயர்லாந்துக்கு எதிரான போட்டியில் இந்த சம்பியன்ஷிப்பின் அனைத்து போட்டிகளையும் இலங்கை விளையாடி முடித்துள்ளது.

## ஷாஹீன் ஷா அப்ரிடி டெஸ்ட் போட்டிகளில் விளையாட மறுப்பு



பாகிஸ்தானின் பிரபல வேகப் பந்து வீச்சாளர் ஷாஹீன் ஷா அப்ரிடி தன்னை தென்னாப்பிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரிலிருந்து விடுவிக்கும்படி பிசிபியிடம் அனுமதி கோரியிருந்தார்.

பாகிஸ்தான் அணி தென்னாப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு T20, ஒருநாள் மற்றும் டெஸ்ட் தொடர்களில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட T20 தொடரை தென்னாப்பிரிக்க அணி 2-0 என வெல்ல 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை பாகிஸ்தான் அணி 3-0 என முழுமையாக கைப்பற்றியது.

தென்னாப்பிரிக்காவுடன் அடுத்து 2 டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்த நிலையில் ஷாஹீன் ஷா அப்ரிடி கூறியதாக வெளியான தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சம்பியன்ஸ் கிண்ணம் முடியும் வரை ஷாஹீன் ஷா தன்னை டெஸ்ட் போட்டிகளில் இருந்து விடுவிக்கும்படி கூறியுள்ளார்.

பங்களாதேஷ் பிரீமியர் லீக்கில் ஷாஹீன் ஷா விளையாட பிசிபி அனுமதி அளித்துள்ளது. இதில் அவருக்கு குறிப்பிடத்தக்க பணம் கிடைப்பதாலும் பிட்னஸை பார்த்துக்கொள்வதாக உறுதியளித்தாலும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாட தயாராக இருப்பதாக ஷாஹீன் ஷா தெரிவித்துள்ளார் சம்பியன்ஸ் கிண்ணம் முடிந்தவுடன் டெஸ்ட்டில் பங்கேற்பதாக ஆப்க்கிடம் அஃப்ரிடி கூறியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்திய அணி பயிற்சிக்கு பழைய ஆடுகளம் வழங்கியதில் சர்ச்சை



மெல்பேர்ன் டெஸ்ட் போட்டிக்கு பயிற்சி மேற்கொள்ள, இந்திய அணிக்கு பழைய ஆடுகளமும் அவுஸ்திரேலிய அணிக்கு புதிய ஆடுகளமும் அளிக்கப்பட்டது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

மெல்பேர்ன் மைதானத்தில் பயிற்சிக்கு என தனித்தனியாக இரு ஆடுகள பகுதிகள் உள்ளன. புதிய ஆடுகளத்தை பார்க்க கூட இந்திய அணியினருக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இதனால், பழைய ஆடுகளத்தில் இரு நாள் (டிச. 21, 22) பயிற்சி மேற்கொண்டனர். இங்கு பந்துகள், கணிக்க முடியாத வகையில் "பவுன்ஸ்" ஆகின. "த்ரோடவுன் ஸ்பெஷலிஸ்ட்" தயாநந்த் கரானி வீசிய பந்து கெப்டன் ரோகித் சர்மாவின் இடது முழங்காலை தாக்கியது. ராகுல், ஆகாஷ் தீப்பின் கையை பதம் பார்க்க, பதறிப் போயினர்.

இந்திய அணியினர் தங்களது பயண விபரங்களை இரண்டு மாதத்திற்கு முன்பே மெல்போர்ன் கிரிக்கெட் சங்கத்திற்கு அனுப்பினர். ஆனாலும், புதிய பயிற்சி ஆடுகளத்தை பயன்படுத்த அனுமதி மறுத்து, சதி செய்தனர். பழைய களத்தின் தன்மை குறித்து இந்திய வீரர்கள் அதிருப்தி தெரிவித்தனர். நேற்று முன்தினம் பயிற்சியில் ஈடுபடவில்லை.

அவுஸ்திரேலிய வீரர்கள் சாமர்த்தியமாக நேற்று முன்தினம் பயிற்சியை துவக்கினர். இவர்களுக்கு புதிய பயிற்சி ஆடுகளத்தை பயன்படுத்த அனுமதி அளித்தது சர்ச்சையை கிளப்பியது. இங்கு பந்துகள் தரமான உயரத்தில் "பவுன்ஸ்" ஆகின.

இது குறித்து மெல்போர்ன் ஆடுகள பராமரிப்பாளர் மேட் பேஜ் கூறுகையில்,

பொதுவாக டெஸ்ட் போட்டி துவங்குவதற்கு மூன்று நாளுக்கு முன்பு தான் புதிய பயிற்சி ஆடுகளத்தை பயன்படுத்த அனுமதிப்போம். டிச. 26ல் தான் டெஸ்ட் துவங்குகிறது. இந்திய வீரர்கள் முன்னதாகவே பயிற்சியை துவக்கினர். ஒருவேளை நேற்று முன்தினம் விரும்பியிருந்தால், புதிய ஆடுகளத்தில் பயிற்சி செய்திருக்கலாம். அவுஸ்திரேலிய வீரர்கள் சற்று தாமதமாக பயிற்சியை துவக்கியதால், புதிய பயிற்சி ஆடுகளம் அனுமதிக்கப்பட்டது.

## நான் மைதானத்தில் இருந்து மனைவிக்கு முத்தம் கொடுத்ததில்லை

நான் 5 விக்கெட்டுகளை அடிக்கடி, எடுக்கும்போது மைதானத்தில் இருக்கும் எனது மனைவிக்கு இதுவரை பறக்கும் முத்தத்தை கொடுத்ததில்லை என்று ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவித்துள்ளார். அதனால் நான் நானாக இருப்பதில் இருந்து நிறைய மாற்றம் அடைந்ததாக உணர்ந்தேன். எனவே எனது புத்தகத்தில் அதை வெளியிடவிரும்பினேன்.

இப்போது நிறைய பேர் விராட் கோலி – ரோகித் சர்மாவை பற்றி பேசுகிறார்கள். நான் வளர்ந்தபோது சச்சினை பற்றி பேசினார்கள். கிரிக்கெட் என்பது அணி சார்ந்த விளையாட்டு. ஆனால் வரலாறு எப்போதும் மதிப்பு மிகுந்த வீரர்களை தான் ஞாபகம் வைத்திருக்கும். என் வாழ்க்கையில் என் அம்மா அப்பாவிற்கு நான் மதிப்பு மிகுந்த வீரர். என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் நான்தான் மதிப்பு மிகுந்த வீரர்" என்று தெரிவித்தார்.

## வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமார அணியில் இணைப்பு



நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் வேகப்பந்து வீச்சாளர் லஹிரு குமார அழைக்கப்பட்டுள்ளார். சில அணிகள் நியூசிலாந்துக்கு கிரிக்கெட் போட்டிக்கு செல்லும் போது நான்கைந்து வேகப்பந்து வீச்சாளர்களை அழைத்துச் செல்வது வழக்கம்.

இலங்கை துடுப்பாட்ட வீரர் பட்டியலில் இருக்கும் ஜனித் லியனகேவுடன், இந்த ஆண்டு இலங்கை ஒருநாள் அணியில் 6 வேகப்பந்து வீச்சாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை – நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரின் மூன்றாவது போட்டிக்கான அணியில் எஷான் மலிங்க இணைக்கப்பட்டிருந்த போதிலும் அவருக்க அங்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. சர்வதேசப் போட்டிகளுக்கு அறிமுகம் ஆகாதவராக இருந்தாலும் மணிக்கு கிட்டத்தட்ட 140 கிலோமீற்றர் வேகத்தில் பந்துவீசக்கூடிய எஷான் மலிங்க. அவர் ஒருநாள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

லஹிரு குமார அணியில் இணைந்ததால் டில்ஷான் மதுங்க தனது இடத்தை இழந்துள்ளார். சரியான இலக்கு இல்லாமல் பந்துவீசியதால், இடது கை வேகப்பந்து வீச்சாளர் தனது கடைசி 3 ஒருநாள் போட்டிகளில் 11 ஓவர்களில் 112 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை மட்டுமே எடுத்துள்ளார்.

துடுப்பாட்ட வீரர்களில் சதீர சமரவிக்ரம தனது இடத்தை இழந்துள்ளார். சதீர சமரவிக்ரம தனது கடைசி 10 ஒருநாள் இன்னிங்ஸ்களில் 109 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் ஜனவரி 5ஆம் திகதி வெலிங்டனில் ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவது போட்டி ஜனவரி 8 ஆம் திகதி ஹாமில்டனிலும், மூன்றாவது போட்டி ஜனவரி 11 ஆம் திகதி ஆக்லாந்திலும் நடைபெறவுள்ளது.

## மாளிகாவத்த யூத் கிளப் முதல்தர உதைப்பந்தாட்ட போட்டிகளுக்கு தகுதி



இலங்கை உதைப்பந்தாட்ட வரலாற்றில் பழமையான மற்றும் மிகவும் பிரபலமான விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான மாளிகாவத்தை யூத் உதைப்பந்தாட்ட கழகம், முதல் பிரிவு உதைப்பந்தாட்ட லீக்கிற்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட தகுதிச் சுற்றுப்போட்டியில் நாடு முழுவதிலும் 16 அணிகள் பங்குபற்றியதுடன், மாளிகாவத்தை யூத் அணி தோல்வியின்றி முதலிடம் பெற்றது.

கம்பளை உதைப்பந்தாட்டக் கழகம், முல்லைத்தீவு புனித ஜுட் விளையாட்டுக் கழகம், பாணந்துறை, தொட்டவத்தை மற்றும் புத்தளம் விளையாட்டுக் கழகங்களை, மாளிகாவத்தை யூத் உதைபந்தாட்ட அணி தோற்கடித்தது. மாளிகாவத்தை யூத் கால்பந்தாட்ட அணியின் தலைவர் மொஹமட் சர்பான் சிறந்த வீரராகத் தெரிவானார். அணியின் பயிற்றுவிப்பாளராக எம்.டி. ரஹீம் செயற்பட்டு வருகிறார். மாளிகாவத்தை யூத் உதைபந்தாட்ட அணி அடுத்த வருடம் நடைபெறவுள்ள முதலாம் டிவிசன் உதைப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டியில் கவனம் செலுத்தி தேசிய மட்டத்திற்குப் பல திறமையான வீரர்களை வழங்குவதே இதன் நோக்கமாகும் என விளையாட்டுக்கழகத்தின் செயலாளர் சிவகுமார் சுப்ரமணியம் தெரிவித்துள்ளார். மாளிகாவத்தை யூத் கழகத்தின் தலைவர் மகேஷ் துஷாந்த ஆவார்.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2024 டிசம்பர் 25ம் திகதி புதன்கிழமை தயார் செய்யப்பட்டு, எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.